# தென்றல் முல்லை

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க வெளியீடு

# Thenral Mullai

A Publication of Tamil Sangam of Greater Washington Inc.

திருவள்ளுவர் ஆண்டு - 2057 | ஜூலை 2026 மலர்: 23 இதழ் : 14





## உள்ளே...


வாசகர் குரல்: சென்ற இதழ் பற்றிய பார்வை 06
இது சுட்டிகளின் பக்கம் 07
அறிவோம்! தெரிவோம்! 08
சொல் விளையாட்டு 09
வெளிச்சம்: மரபிசை மற்றும் மரபுக் கலைகள் 10
நேர மேலாண்மை: வெற்றியின் இரகசியம் 14
குறளோடு ஒரு கதை 16
எனக்குப் பிடித்த பருவகாலம் – இலையுதிர் காலம் 18
குழந்தைகளின் ஓவியங்கள் 20
என் மொழி என் அடையாளம் 23
கவினும் அம்மாவும் உணவே மருந்து 24
நேர மேலாண்மை: வெற்றியின் இரகசியம் 26
வரலாற்றுப் பாதையில் ஒரு பயணம்:
அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் 28
பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் 15ஆம் ஆண்டு விழா 2026 30
வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின்
சித்திரை விழாக் கொண்டாட்டம் 34
வள்ளுவன் தமிழ் மையம் 16 ஆம் ஆண்டுவிழா 36
நினைவுகள் 40
சங்க இலக்கியச் சொற்பொழிவுகள் 41
வாழ்த்துரை 42
பசுமரத்தாணியாய் நம் ஊரின் நினைவுகள்.... 43
பெண்மை...பெருமை.... 44
படைப்பும் படைப்பாளியும்:
"மாயமான்" சிறுகதை அறிமுகம் 46
பாரதியார் தமிழ்ப்பள்ளி ஆண்டு விழா –
கலை, கல்வி, பண்பாடு இணைந்த பெருவிழா 49

# முத்தமிழ் விழா வாழ்த்துகள்



# Balagan Business & Tax Service



Balagan Business & Tax Services can provide you with assistance in all your tax, financial, and business affairs - assistance that will improve your total financial well-being.



**We want you to get the best financial and tax help possible. If you have a question which is not addressed here, please contact us via**
**e-mail: questions@balaganfinancials.com**
**or by phone:**

**(301) 931-1040/ (703) 723-9471**

## Please visit our website for more information:

**http://balaganfinancials.com/mobile/**

Tamil Sangam of Greater Washington Inc.

## தமிழ்ச்சங்கச் செயற்குழு 2026

**தலைவர்**
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்

**துணைத்தலைவர்**
திரு. சீனிவாசன் சண்முகம்

**செயலாளர்**
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி

**துணைச் செயலாளர்**
திரு. பாலாஜி துரைசாமி

**பொருளாளர்**
திருமதி காமேஷ்வரி சந்திரசேகர்

**துணைப் பொருளாளர்**
திருமதி அன்னபூரணி அருணாசலம்

**செயற்குழு இயக்குநர்கள்**
திரு. கொழுந்தவேல் இராமசாமி
திரு. எழில்வாணன் கலைவாணன்
திருமதி தீபா செந்தில்நாத்
திரு. பிரகாஷ் மாதேஷ்
செல்வி சுபஸ்ரீ சுசீந்தரன்
செல்வன் அஸ்வின் பாபுவிநாயகம்
திரு. மோகன்ராஜ் அண்ணாமலை

# தலைவர் உரை



பேரன்பிற்குரிய வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் செயற்குழுவின் சார்பாக வணக்கத்தையும், முத்தமிழ் விழா வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். தென்றல் முல்லையின் முத்தமிழ் விழா இதழுக்குப் பங்களித்தவர்களையும், இவ்விதழைச் செம்மையுடன் வெளிக்கொணர்ந்த ஆசிரியர் முனைவர் பாலா குப்புசாமி அவர்களையும் மற்றும் ஆசிரியர்க் குழுவினரையும் மனதாரப் பாராட்டுகிறோம்.

நமது சங்கத்தின் சித்திரைத் திருவிழாவானது கடந்த ஏப்ரல் மாதம் சீருடனும், சிறப்புடனும் நடந்தேறியது. இவ்விழாவின் வெற்றிக்காகப் பல்வேறு வழிகளில் உழைத்திட்ட தன்னார்வலர்களுக்கும், பங்கேற்பாளர்களுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழுக்கே உரிய பாரம்பரிய முறைப்படி பரிமாறப்பட்ட வாழையிலை உணவு, மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தெம்பளிப்பதாக அமைந்தது. சிறப்பான உணவைப் பரிமாறிய சென்னை எக்ஸ்பிரஸ் உணவகத்தார்க்கு மிக்க நன்றி. அதுபோல, சிறுதானியங்களால் செய்யப்பட்ட தின்பண்டங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததும், மக்கள் அவற்றை விரும்பி வாங்கி உண்டதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இரசிகா இசைக் குழுவினரின் சிறப்பான நிகழ்ச்சி அரங்கு நிறைவான ஒன்றாக அமைந்ததும், பார்வையாளர்கள் பாடி ஆடி மகிழ்ந்ததும் பெருமகிழ்வைத் தந்தது. உங்களின் பங்களிப்பினால் மட்டுமே இது சாத்தியமானது. உங்களின் தொடர் ஆதரவிற்கு மீண்டும் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை ஒவ்வொரு ஆண்டும் தமிழ் விழாவை அமெரிக்காவின் வெவ்வேறு மாநகரங்களில் நடத்துவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வகையில் இந்த ஆண்டு ஜூலை 2, 3, 4

பொறுப்புத் துறப்பு: புலம் பெயர்ந்த தமிழர்களின், தமிழ் ஆர்வலர்களின் தமிழ் மீது உள்ள ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களின் படைப்புகள் தென்றல் முல்லை இதழில் வெளியிடப் படுகின்றன. ஆகவே, இந்த இதழில் வந்துள்ள படைப்புகளின் கருத்துகள் யாவும் படைப்பாளிகளின் கருத்துகள் ஆகும். எனவே, அந்தக் கருத்துகளுக்கு வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கமோ அல்லது தென்றல் முல்லை ஆசிரியர் குழுவோ பொறுப்பேற்க இயலாது.

Disclaimer: The views and opinions expressed in articles published in ThenRal Mullai are those of the authors and do not necessarily reflect the official policy or position of Tamil Sangam of Greater Washington Inc or ThenRal Mullai editorial board.

தேதிகளில் நியூஜெர்சியில் நடைபெற்ற 39 ஆவது ஆண்டு விழாவில், நம் பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டு, சிறப்பான வகையில் தங்களின் பங்களிப்பினை நல்கிய நம் பகுதியைச் சார்ந்த பெருமக்கள் அனைவருக்கும் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம். பேரவையின் விழாவிற்காக வந்திருக்கும் விருந்தினர்கள் சிலர், இன்று நமது முத்தமிழ் விழாவிலும் கலந்துகொள்வதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம்.

இத்தனை ஆண்டுகாலம் நீங்களெல்லாம் எவ்வாறு நம் தமிழ்ச் சங்கத்திற்குப் பேராதரவு தந்து சங்கத்தின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கிறீர்களோ அதுபோலவே, எதிர்வரும் காலத்திலும் நல்லாதரவு தந்து, பொன்விழாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நமது சங்கத்தின் எதிர்கால வளர்ச்சியிலும் பங்கெடுத்துக்கொள்ளுமாறு அன்போடு உங்கள் அனைவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு தற்காலிகமாக விடைபெற்றுக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்!

## இது நமது தமிழ்ச்சங்கம்! நாம் அனைவரும் அதன் அங்கம்!!
## வாழ்க தமிழ்! வளர்க நம் ஒற்றுமை!!

**நன்றி வணக்கம்! அன்புடன்,**

**செந்தில் மலைக்கொழுந்து குமார்**
**தலைவர், வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்**

**Email: president@washingtontamilsangam.org**

## வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்துடன் தொடர்ந்து இணைந்திருங்கள்...

சமூக ஊடகத்தில் உள்ளவர்கள் நம் வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ச்சங்க முகநூல் (FACEBOOK)/ புலனம் (WHATSAPP) குழுமத்தில் இணைந்திருங்கள். நம் செய்திகளை உங்கள் நண்பர்களுக்கும் பகிருங்கள்.

இணையத்தளம் : WWW.WASHINGTONTAMILSANGAM.ORG

யூடுப் சேனல் : HTTPS://YOUTUBE.COM/C/TSGWTAMILSANGAM

மின்னஞ்சல் : INFO@WASHINGTONTAMILSANGAM.ORG

Instagram
TSGWDC
WhatsApp
Social Media QR Code Connect with Us

Tamil Sangam of Greater Washington Inc.

**தென்றல் முல்லை ஆசிரியர்க்குழு 2026**

**முதன்மை ஆசிரியர்:**
முனைவர் பாலா குப்புசாமி

**இணை ஆசிரியர்கள்:**
திருமதி விஜயா சிவப்பிரகாசம்
திருமதி ரஹீமா அலாவுதீன்
திருமதி அனிதா மதனகுரு
திருமதி அபிநயா மோகன்குமார்
திரு. கமலபாரதி பச்சியப்பன்
திரு. மோகன்ராஜ் பாலசுப்ரமணியன்
திருமதி மோனிகா ஜெரால்டு
திருமதி பானு கணேஷ்
திருமதி புவனேஸ்வரி இராஜேஷ்குமார்

**இளம் துணை ஆசிரியர்கள்:**
செல்வி இலக்கியா பாலமுருகன்
செல்வன் ரக்ஷன் சீனிவாசன்
செல்வி கீர்த்தனா கணேஷ்
செல்வி தியா கமலபாரதி
செல்வி சாதனா திலக்
செல்வன் விநாயக் பாபு கணேஷ்
செல்வன் சூர்யா அறிவுமணி
செல்வி ரோஷினி செல்வம்
செல்வி ஆராதனா அருண்
செல்வி மான்சி சந்திரசேகரன்
செல்வி இனயா நிசாமுதீன்
செல்வி இனியா எழில் வடிவன்

**சிறப்பாசிரியர்கள்:**
திரு. நாஞ்சில் இ பீற்றர்
முனைவர் மீனாட்சி சந்திரசேகரன்
திரு. இளவழுதி வீரராசு
திருமதி சுமித்ரா பாபு கணேஷ்

**செயற்குழு தொடர்பாளர்கள்:**
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி
திரு. பாலாஜி துரைசாமி

**முன் அட்டைப்பட ஓவியம்:**
செல்வி இலக்கியா பாலமுருகன்
செல்வி ஹாசினி விஸ்வபாரதி
செல்வி மோஷிகா இராஜேஷ்குமார்

**இதழ் அச்சீடு நன்கொடை:**
மினிட்மேன் அச்சகம் (Minuteman Press) விர்ஜீனியா

வடிவமைப்பு
திரு. இசக்கி, esakki2006@gmail.com
+91 9710755689, +91 9962505384

# ஆசிரியர் உரை

தமிழன்னைக்கும், தமிழுறவுகளுக்கும் வணக்கம்!

அனைவரும் அன்னையர் நாள் மற்றும் தந்தையர் நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடி இருப்பீர்கள் என நம்புகிறேன். நான் எழுதிய ஹைக்கூ கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

**உலகம்...**
**என்னுடையதாய் உணர்கிறேன்**
**என் அம்மாவின் மடியிலும், அப்பாவின் பிடியிலும்.**

உண்மை தானே! உலகில் நமக்குக் கிடைத்த ஒப்பிலா உறவுகள் நம் தாயும், தந்தையரும். அனைத்து அன்னையர்களுக்கும், தந்தையர்களுக்கும் வாழ்த்துகள்.

இளம் எழுத்தாளர்களின் படைப்புகளை அங்கீகரிக்கவும், அவர்களைப் பேச்சாளராகச் சிறப்பித்து, அவர்தம் மேடைப்பேச்சுத்திறனை அதிகரிக்கவும் கடந்த ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி இளம் எழுத்தாளர்களின் கலந்துரையாடல் நிகழ்வு இணைய வழியில் சிறப்பாக நடைபெற்றது. அனைத்து தென்றல் முல்லை இளம் எழுத்தாளர்களும் தங்களின் படைப்பைப் பற்றி சிறப்பாகப் பேசினர். நிகழ்வின் சுருக்கத்தைக் கவிதையாக வடித்துள்ள திருமதி சுசீலா பழனிசுவாமி அவர்களுக்கு நன்றிகள். இந்நிகழ்வு தொடரும் என்பதையும் அடுத்த நிகழ்வு ஆகஸ்ட் மாதத்தில் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் பெருமையோடு அறிவிப்பதில் அளவிலா மகிழ்வு.

பல்சுவை இதழாய் இதோ! முத்தமிழ் விழா இதழ் உங்கள் கைகளில்! படித்து, உங்களின் கருத்துகளை எங்களுக்குத் தெரிவியுங்கள். “வாசகர் குரல்” பகுதியில் உங்கள் கருத்துகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். இதழை சிறப்பாகக் கொண்டு வர உழைத்த தென்றல் முல்லை சக ஆசிரிய நண்பர்களுக்கும், சிறப்பான படைப்புகளைத் தந்த படைப்பாளிகளுக்கும் என் நன்றிகள். தொடர்ந்து உங்களின் சிந்தனைகள், படைப்புகள் மற்றும் கருத்துகளை thenral.mullai@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நமது தென்றல் முல்லை இதழுக்கு தொடர்ந்து ஆதரவு தந்து வரும் நமது வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், கொடையாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு எங்கள் தென்றல் முல்லை ஆசிரியர்க் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

கோடை விடுமுறையை அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள்.

**தமிழின் பெருமை,**
**அதன் தொன்மை, வளமை!**
**அனைவரின் உள்ளங்களிலும் இல்லங்களிலும்**
**தமிழ் ஒலிக்கட்டும்!**
**கவின்மிகு தமிழின் புகழ்**
**தரணியெங்கும் பரவட்டும்!**
**மனிதம் தழைக்கட்டும்!**



மீண்டும் அடுத்த இதழில் உங்களோடு பேசுகிறேன்.

தோழமையுடன்...

**முனைவர் பாலா குப்புசாமி**
**முதன்மை ஆசிரியர்**



# வாசகர் குரல்: சென்ற இதழ் பற்றிய பார்வை

**திருமதி சத்யா பாபு**

## எத்திசையும் புகழ் மணக்கும் எமது தமிழ் !

வாசகர்களுக்கு தென்றல்முல்லை வாசத்துடன் வணக்கம்!

நமது குழந்தைகளான வண்ணப்பூக்கள் சூழ, மண்வாசனையில் அழகர் ஆற்றிலே இறங்கும் அட்டைப்படம் பிரதிபலிக்கிறது ,இவ்விதழ் சித்திரைத் திருவிழாவின் சிறப்பிதழென்று!

குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைத்து கலைஞர்களின் படைப்பாற்றலை அரங்கேற்றும் ஒரு சிறந்த மேடையாக தென்றல்முல்லை இதழ் திகழ்கிறது.

சித்திரைத்திருவிழா வாழ்த்துக்களுடன் கூடிய தலைவர் உரை,விழாக்களின் வெற்றிகளையும், சமூகத்தின் பங்களிப்பையும் வாழ்த்துக்களுடன் பகிர்ந்திருந்தது. இணையவழியில் நடைபெறும் சங்கஇலக்கிய தொடர்ச்சொற்பொழிவு மற்றும் இளம் எழுத்தாளர்களின் கலந்துரையாடல் பற்றிய தகவல்கள், நம் அனைவரையும் ஊக்குவிக்கும் பொருட்டு இருந்தது.

ஆசிரியர் உரை, பல்சுவை இதழாய் வடிவமைத்ததைப் பற்றியும், படைப்பாளிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பாராட்டுதலுடன் கூடிய நன்றியை பகிர்ந்தது சிறப்பானதாக இருந்தது.

வாசகர் குரல் பகுதி,நாம் சென்ற இதழைத்தவறவிட்டாலும், மீண்டும் தேடிப் படிக்கத்தூண்டும் ஒரு தூண்டுகோலாகும்.

சுட்டிகளின் பக்கம், மகிழ்வின் தொடக்கம்!

அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களின் அறிமுகங்கள், புதியதேடலின் வரலாற்றுச் சிறப்புப் பகுதியாக இருக்கிறது.

சொல்விளையாட்டில் உள்ள புதிர்கள் மற்றும் விடுகதைகள், இவைகளின் விடைகளுக்கான ஆவலுடன் கூடிய தேடல், நம் மூளைக்கு ஒரு புத்துணர்ச்சி என்றே சொல்லலாம்.

வெளிச்சம் பகுதியில், "மல்லர்கம்பம்" என்ற நமது பாரம்பரிய தற்காப்புக்கலை உலக அரங்கில் ஒளிர்கின்றது என்பதை, மல்லர்கம்பப் பயிற்றுநர் திருமதி தேவிகா அவர்களிடம் கண்ட நேர்காணல் மூலம் அறிந்து கொண்டோம். கம்பத்திலும், கயிற்றிலும் புவிஈர்ப்பு விசையை எதிர்த்துச்செய்யும் பலசாகசங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

உணவே மருந்து பகுதியின், கவினும் அம்மாவும் கலந்துரையாடலில், "ஆரோக்கியமான வாழ்விற்கு அளவாக உண்க" என்பதை எளியநடையில் வெளிப்படுத்தியது சாலச்சிறந்தது.

குறளோடு ஒரு கதை தலைப்பில், மாணவி கச்சிதமாக நீதிக் கதையை குறளோடு ஒப்பிட்டது அற்புதம்!

ஈரான் இஸ்ரேல் போர் பற்றி இளையோரின் பார்வையில், போரின் வரலாற்றையும் அதன் விளைவுகளையும் உலகமக்களின் விருப்பத்தையும் வெளிப்படுத்தியது சிறப்பு.

குழந்தைகளின் ஓவியங்கள், தென்றல் முல்லை சூடிய வாகை !

வெள்ளைத்தாளில் விளையாடிய அவர்களின் கற்பனை வண்ணங்கள் நாம் வியந்த பேரழகு!

அறிவோம்!தெரிவோம்! பகுதியில் தமிழாண்டின் பெயர்களை தமிழிலேயே அறிய வைத்தது பாராட்டுதலுக்குரியது.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் பொங்கல் விழா, பாரதியார் தமிழ்ப்பள்ளி பொங்கல் விழா மற்றும் பிரெடெரிக் தமிழ்ப்பள்ளி பொங்கல் விழாக்களைப் பற்றி அறியும் பொழுது, தமிழ்ச் சமூக பண்பாடு, கலாச்சாரம், சமூக ஒற்றுமையைக் கொண்டாடும் ஒருங்கிணைந்த ஒரு குடும்பத்திருவிழா என்றென்றும் தொடரும் என மனதில் ஆழமாகத் தோன்றுகிறது.

மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின் கலை மற்றும் இலக்கியப் போட்டிகள், தமிழ்மொழியின் பெருமை, தமிழ்ப்பற்று என நம் மரபுகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டுசெல்லும் பாலமாக இந்த முத்தமிழ்விழா திகழ்கிறது. மாணவர்களின் திறமைகளை ஊக்குவிப்பதுடன்,பாரம்பரிய விளையாட்டுகளை அறிமுகப்படுத்தியவிதம் அருமை!

இத்தருணம் தரும் மகிழ்ச்சியை உணர்வுப்பூர்வமாக்கிய கவிதை, சுவாரசியமானதாக இருந்தது. பெண்மை! பெருமை! பகுதியில் எழுத்தாளர் ஓவியா அவர்களின் புதிய சிந்தனைகள், உணர்ச்சிகள் சமூகப்பார்வைகள் கலந்த படைப்புகளாக வெளிப்படுத்தும் இக்கட்டுரை சமூகப் பொறுப்புணர்வை எழுப்புகிறது.

இணையவழியில் நடைபெறும்,வாசிங்டன் வட்டாரத்தமிழ்ச் சங்கத்தின் சங்க இலக்கியச் சொற்பொழிவுகள் வழங்கிய, இலக்கியத் தொன்மை மற்றும் பெருமை பற்றிய அரிய தகவல்களால் நாமும் கலந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணம் உருவாகிறது.

படைப்பும், படைப்பாளியும் பகுதியில் தோழர் சோபா சக்தி அவர்களின் "வாழ்க" என்ற சிறுகதைத் தொகுப்பு, தமிழ்ச் சமூகத்தின் போலித்தனமான கௌரவத்தையும், சாதியவன்மத்தையும் இக்கதை மிகக் கூர்மையாக விமர்சிக்கிறது. எழுத்தாளர்கள் உண்மையை உரிக்கும் ஆயுதம் என்பது தெளிவாகிறது.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் 2025 பிக்கள்பால் போட்டி புதிய அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டது, சமூக ஒன்றிணைப்பிற்கான சான்றாகக் கருதுகிறேன்.

“தாய்கிழவி” திரைப்பட விமர்சனத்தில், பெண்ணியம், சமஉரிமை, சிக்கனம் போன்றவற்றை பதிவுசெய்ததை அழகாக விமர்சித்திருக்கிறார்கள். பெண்களின் சுயவேலையில் உள்ளது உண்மையான சுதந்திரம் என உரக்கச்சொல்லியது இந்தத் திரைப்படம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ச்சங்கம் ! வளர்க தென்றல் முல்லையின் படைப்புகள்!














சுட்டிகளுக்காக... சுட்டிகளோடு.... சுட்டிகளால்...








# இது சுட்டிகளின் பக்கம்

(இளம் துணை ஆசிரியர்களால்)











# அறிவோம்! தெரிவோம்!



வணக்கம். நான் உங்கள் மான்சி சந்திரசேகரன். எனக்கு நல்லாவே தெரியுது நீங்கள் எல்லாம் இந்தப் பகுதி படிக்கக் காத்திருப்பது. நான் பள்ளியிலிருந்து வரும்போதே அம்மா பசிக்குதுன்னு சொல்லிட்டே வருவேன். உனக்கு எப்படி இந்த சாப்பாடு வருதுன்னு தெரியுமான்னு அம்மா கேட்டாங்க .. தெரிஞ்சிகிட்டா போச்சு .. நமக்குத்தான் கூகுள் மாமா இருக்கிறார், என்ன வேணுமோ தெரிஞ்சுக்கலாம் மகிழ்ச்சியா வாங்க..!! சோறு முக்கியம் பிகிலு !!!

சரி, சோறு எப்படி வருது எனத் தெரிய ஆவலா இருக்கா?

சோறுவரும்வழி ...

01. வயல் காட்டைச் சீர்செய்தல்
02. ஏர் பிடித்தல்
03. உழவு ஓட்டுதல்
04. பரம்படித்தல்
05. விதை நெல் சேகரித்தல்
06. விதை நேர்த்தி செய்தல்
07. விதைகளை நீரில் ஊற வைத்தல்
08. நாற்றங்காலில் விதைத்தல்
09. நாற்றாக வளருதல்
10. நாற்று எடுத்தல்
11. முடிச்சு கட்டுதல்
12. வயல் நிலத்தில் முடிச்சு வீசுதல்
13. நடவு நடுதல்
14. களையெடுத்தல்
15. உரமிடுதல்
16. எலியிடம் தப்புதல்
17. பூச்சியிடமிருந்து பாதுகாத்தல்
18. நீர் தட்டுப்பாடு இன்றி வளருதல்
19. கதிர் முற்றுதல்
20. கதிர் அறுத்தல்
21. கட்டு கட்டுதல்
22. கட்டு சுமந்து வருதல்
23. களத்துமேட்டில் சேர்த்தல்
24. கதிர் அடித்தல்
25. பயிர் தூற்றல்
26. பதறுபிரித்தல்
27. மூட்டை கட்டுதல்
28. நெல் ஊறவைத்தல்
29. நெல் அவித்தல்
30. களத்தில் காயவைத்தல்
31. மழையிலிருந்து பாதுகாத்தல்
32. நெல் குத்துதல்
33. நொய்யின்றி அரிசியாதல்
34. அரிசியாக்குதல்
35. மூட்டையில் பிடித்தல்
36. விற்பனை செய்தல்
37. எடை போட்டு வாங்குதல்
38. அரிசி ஊறவைத்தல்
39. அரிசி கழுவுதல்
40. கல் நீக்குதல்
41. அரிசியை உலையிடல்
42. சோறு வடித்தல்
43. சோறு சூடு தணிய வைத்தல்
44. சோறு இலையில் இடல்



**செல்வி மான்சி சந்திரசேகரன்**

"உணவே உயிர்" எனச் சொல்லி இருக்கிறாங்க ஆனா ஒரு பிடி சோறு எத்தனை உழைப்பு, தடைகளைத் தாண்டி நமக்குக் கிடைக்கிறது. ஒரு கிலோ அரிசிக்கு 14,500 லிட்டர் தண்ணீர் தேவைப்படுதாம். இதைத் தெரிந்து கொண்ட பிறகு சோற்றைப் பார்க்கும்போது அந்த உணவு நம் இலைக்கு வந்த பாதையையும், அதன் பின்னுள்ள உழவனின் உழைப்பையும் நினைத்து நன்றியுடன் உண்போம். உணவை மதிப்போம்; வீணாக்காமல் பாதுகாப்போம். என்னங்க நீங்களும் இதைப் படித்த பிறகு அதன் மதிப்பை உணர்ந்து உணவை வீணாக்க மாட்டிங்க இல்ல ! உழைப்பின் உணர்வோடு, நான் இணையத்தில் படித்ததில் பிடித்ததை உங்களுடன் பகிர்வதில் மிக்க மகிழ்ச்சி...

# சொல் விளையாட்டு

குறிப்புகளைக்கொண்டு வார்த்தைகளைக் கண்டறிக.

1. முதல் மற்றும் இரண்டாம் எழுத்து உடலின் ஒரு உறுப்பு.
2. மூன்று மற்றும் நான்காம் எழுத்து தினமும் நாம் குடிப்பது.

அந்த நான்கெழுத்து சொல்?.

**II. இதுவும் ஒரு நான்கெழுத்து சொல்லே.**

1. முதல் மற்றும் இரண்டாம் எழுத்து நீரில் வாழும் உயிரினம்.
2. மூன்று மற்றும் நான்காம் எழுத்து கண்ணிற்கான மறுபெயர்.

என்ன கண்டுபிடிச்சீங்களா?

விடைகள் 23 ஆம் பக்கம் பார்க்க



செல்வி இலக்கியா பாலமுருகன்







# வெளிச்சம்

## மரபிசை மற்றும் மரபுக் கலைகள்

# கரகாட்டம் – தமிழர் பண்பாட்டின் தலையாய நாட்டுப்புறக் கலை

தொகுப்பு: செல்வி இனியா எழில்வடிவன் மற்றும் திருமதி அபிநயா மோகன்குமார்

தமிழர் பண்பாட்டு மரபில் நாட்டுப்புறக் கலைகளுக்கு தனித்துவமான இடம் உண்டு. அவற்றில் காலத்தால் அழியாத கலை வடிவமாக விளங்குவது கரகாட்டம். இசை, நடனம், சமநிலை, உடல் திறன், பக்தி மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றை ஒருங்கே வெளிப்படுத்தும் இக்கலை, தமிழர்களின் வாழ்வியலோடும் பண்பாட்டோடும் நெருங்கிய தொடர்புடையதாகும்.

தலையில் அழகாக அலங்கரிக்கப்பட்ட கரகத்தைச் சுமந்து, இசையின் தாளத்திற்கு ஏற்ப நளினமாக ஆடும் கலைஞர்களின் அசைவுகள் பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்கின்றன. கிராமப் புறங்களில் தோன்றி வளர்ந்த கரகாட்டம் இன்று உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் கலாச்சார அடையாளமாகத் திகழ்கிறது.



செல்வி இனியா எழில்வடிவன்



திருமதி அபிநயா மோகன்குமார்

### வரலாற்றுப் பின்னணி

கரகாட்டத்தின் வேர்கள் தமிழர் தொன்மைச் சமூகத்தில் ஆழமாகப் பதிந்துள்ளன. சங்ககாலம் முதலே மழையை நம்பி வாழ்ந்த விவசாய சமுதாயமாக தமிழர்கள் இருந்தனர். நல்ல மழை பொழிந்து விளைச்சல் பெருக வேண்டும் என்ற வேண்டுதலுடன் மழைத் தெய்வங்களையும் மாரியம்மனையும் வழிபட்டனர்.

மாரியம்மன் கோவில் திருவிழாக்களில் பக்தர்கள் தலையில் நீர் நிரப்பிய குடங்களை ஏந்தி ஊர்வலமாகச் செல்வது வழக்கமாக இருந்தது. காலப்போக்கில் இந்த வழிபாட்டு மரபு இசை மற்றும் நடனத்துடன் இணைந்து கரகாட்டமாக உருமாறியது. பின்னர் கோவில் வளாகங்களைத் தாண்டி மேடை நிகழ்ச்சிகளிலும் மக்களின் பாராட்டைப் பெற்றது.

### கரகம் – கலையின் மையம்

கரகாட்டத்தின் உயிர் கரகமே. மண், பித்தளை அல்லது செம்பால் செய்யப்பட்ட குடம், வண்ணத் துணிகள், மலர்கள், கண்ணாடிகள், மணிகள் மற்றும் பல்வேறு அலங்காரப் பொருட்களால் அழகுபடுத்தப் படுகிறது.

ஒரு கரகத்தின் எடை மூன்று முதல் பத்து கிலோ வரை இருக்கலாம். திறமையான கலைஞர்கள் உயரமான மற்றும் கனமான கரகங்களைக் கூட தலையில் சமநிலையுடன் வைத்து ஆடுவதன் மூலம் தங்களது அசாதாரண திறமையை வெளிப்படுத்துகின்றனர்.

### கரகாட்டத்தின் இரு முகங்கள்

#### சக்தி கரகம்

சக்தி கரகம் என்பது பக்தி சார்ந்த கரகாட்டமாகும். அம்மன் கோவில் திருவிழாக்களில் பக்தர்கள் நேர்த்திக்கடனாக கரகத்தை ஏந்தி ஆடுவர். இதில் கலைநயத்தை விட பக்தி உணர்வே மேலோங்கி நிற்கும்.

#### ஆட்ட கரகம்

ஆட்ட கரகம் மக்களை மகிழ்விக்கும் நோக்கில் நிகழ்த்தப்படும் கலை வடிவமாகும். இதில் சுறுசுறுப்பான நடன அசைவுகள், சாகசங்கள், நகைச்சுவை மற்றும் பார்வையாளர்களை ஈர்க்கும் பல்வேறு கலை அம்சங்கள் இடம்பெறும்.

### இசையும் கரகாட்டமும்

கரகாட்டத்தின் வெற்றியில் இசையின் பங்கு அளப்பரியது. தாளத்தின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப கலைஞர்கள் தங்களது அசைவுகளை மாற்றிக் கொள்வர்.

கரகாட்டத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்:

- நாதஸ்வரம்
- தவில்
- பம்பை
- உருமி
- தமுக்கு
- தாளம்

இந்த இசைக்கருவிகளின் ஒலிகள் ஒன்றிணைந்து கரகாட்டத்திற்கு உயிரும் உற்சாகமும் அளிக்கின்றன.

## உடை அலங்காரத்தின் சிறப்பு

கரகாட்டக் கலைஞர்களின் வண்ணமயமான உடைகளும் அலங்காரங்களும் கலை நிகழ்ச்சியின் கவர்ச்சியை மேலும் அதிகரிக்கின்றன.

பெண்கள் பாரம்பரிய புடவை அல்லது நாட்டுப்புற ஆடைகள், மலர் அலங்காரம், வளையல்கள், பொட்டு மற்றும் பாரம்பரிய நகைகளுடன் தோன்றுவர். ஆண்கள் வண்ண வேட்டி, சட்டை அல்லது மேலாடை, தலைப்பாகை மற்றும் இடுப்புப் பட்டையுடன் காட்சியளிப்பர்.

இந்த அலங்காரங்கள் கலைஞர்களின் தோற்றத்தை மட்டுமல்ல, தமிழர் பாரம்பரியத்தின் அழகிய வெளிப்பாடாகவும் அமைகின்றன.

## பயிற்சியும் அர்ப்பணிப்பும்

கரகாட்டம் எளிதில் கற்றுக்கொள்ளக்கூடிய கலை அல்ல. பொறுமை, ஒழுக்கம் மற்றும் தொடர்ச்சியான பயிற்சி அவசியம்.

ஆரம்ப நிலையில் உடல் சமநிலையைப் பேணுதல், தலையில் புத்தகம் அல்லது சிறிய பாத்திரம் வைத்து நடப்பது போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பின்னர் காலியான கரகத்துடன் நடைபயிற்சி, நடன அசைவுகள் மற்றும் இசைத் தாளங்களைப் புரிந்துகொள்வது கற்பிக்கப்படுகிறது.

மேம்பட்ட நிலையில் அலங்கரிக்கப்பட்ட கரகத்துடன் சுழன்று ஆடுதல், வேகமான அசைவுகளைச் செய்தல் மற்றும் மேடை நிகழ்ச்சி களுக்கான ஒத்திகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## வியக்க வைக்கும் சாகசங்கள்

கரகாட்டக் கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தும் பல சாகசங்கள் பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்துகின்றன.

- கரகத்தைத் தலையில் வைத்து சுழன்று ஆடுதல்
- ஏணியில் ஏறி நடனமாடுதல்
- கண்களை மூடி நடப்பது
- தரையில் உள்ள பொருளை வாயால் எடுப்பது
- நாற்காலி அல்லது பாத்திரத்தின் மேல் நின்று ஆடுதல்

பல ஆண்டுகளின் கடுமையான பயிற்சிக்குப் பிறகே இத்தகைய திறமைகள் சாத்தியமாகின்றன.

## சமூகத்தில் கரகாட்டத்தின் பங்கு

கரகாட்டம் ஒரு கலை நிகழ்ச்சி மட்டுமல்ல; அது சமூக ஒற்றுமையை உருவாக்கும் ஒரு கலாச்சாரப் பாலமாகும். கிராமத் திருவிழாக்கள், குடும்ப விழாக்கள் மற்றும் சமூக நிகழ்ச்சிகளில் மக்களை ஒன்றிணைத்து மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறது.

மேலும் இளம் தலைமுறையினருக்கு தமிழர் வரலாறு, பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை அறிமுகப்படுத்தும் முக்கியமான ஊடகமாகவும் விளங்குகிறது.

## கரகாட்டத்தின் பலன்கள்

கரகாட்டப் பயிற்சி பல உடல் மற்றும் மன நல நன்மைகளை வழங்குகிறது.

- உடல் சமநிலையை மேம்படுத்துகிறது.
- நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது.
- கவனம் செலுத்தும் திறனை வளர்க்கிறது.
- தன்னம்பிக்கையை உயர்த்துகிறது.
- சிறந்த உடற்பயிற்சியாக அமைகிறது.
- பாரம்பரியக் கலையைப் பாதுகாக்க உதவுகிறது.

## நவீன உலகில் கரகாட்டம்

இன்றைய காலகட்டத்தில் கரகாட்டம் கிராமங்களைத் தாண்டி பள்ளிகள், கல்லூரிகள், கலைவிழாக்கள் மற்றும் சர்வதேச தமிழ் நிகழ்ச்சிகளில் பெருமையுடன் அரங்கேறுகிறது. தமிழக அரசும் பல கலை அமைப்புகளும் இக்கலையைப் பாதுகாக்கவும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் கரகாட்டத்தை தங்கள் கலாச்சார நிகழ்ச்சிகளில் இணைத்து, தமிழர் அடையாளத்தைப் பேணுவதில் முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

## நிறைவாக

கரகாட்டம் என்பது ஒரு நடனக் கலை மட்டுமல்ல;

அது தமிழர் மரபு, பக்தி, உடல் திறன் மற்றும் கலை நுணுக்கத்தின் சங்கமமாகும். நூற்றாண்டுகளைக் கடந்தும் தனது உயிர்ப்பை இழக்காமல் தலைமுறைகளைக் கடந்து பயணிக்கும் இந்த நாட்டுப்புறக் கலை, தமிழர் பண்பாட்டின் பெருமைமிகு சின்னமாகத் திகழ்கிறது.

இன்றைய இளைஞர்கள் கரகாட்டத்தின் சிறப்பை அறிந்து கற்று, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் போது, நமது பண்பாட்டு மரபும் கலைச் செல்வமும் என்றும் நிலைத்திருக்கும்.

### தகவல் பெட்டகம்:

- கரகாட்டம் சங்ககால மரபின் தொடர்ச்சி
- கரகாட்டத்தின் வேர்கள் பண்டைய தமிழர் விவசாய மற்றும் வழிபாட்டு மரபுகளுடன் தொடர்புடையவை என்று பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.
- கரகம் 10 கிலோவிற்கும் மேல் எடையுடையதாக இருக்கலாம் - திறமையான கலைஞர்கள் கனமான மற்றும் உயரமான கரகங்களைத் தலையில் சமநிலையுடன் வைத்து நீண்ட நேரம் ஆடுவார்கள்.
- கைகளின் உதவியின்றி ஆடும் கலை - கரகாட்டத்தின் சிறப்பு தலையில் உள்ள கரகத்தைக் கைகளால் பிடிக்காமல் சமநிலையுடன் ஆடுவதில்தான் உள்ளது.
- உடலும் மனமும் ஒன்றாகச் செயல்படும் கலை– கரகாட்டம் உடல் சமநிலை, கவனம், நினைவாற்றல் மற்றும் தன்னம்பிக்கையை மேம்படுத்தும் முழுமையான கலைப் பயிற்சியாகக் கருதப்படுகிறது.
- உலக அரங்கில் கரகாட்டம் இன்று அமெரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் நடைபெறும் தமிழ் விழாக்களில் கரகாட்டம் முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெறுகிறது.
- இசை இல்லாமல் கரகாட்டம் இல்லை நாதஸ்வரம் மற்றும் தவில் இசையின் தாளம்தான் கரகாட்டத்திற்கு உயிரூட்டுகிறது. இசையும் நடனமும் ஒன்றிணைந்தால்தான் கரகாட்டத்தின் முழு அழகை இரசிக்க முடியும்.

CHENNAI EXPRESS
RESTAURANT & CATERING
www.chennaiexpressva.com

Zillion Technologies
Thought beyond the DOT

CMMI Level 3 & ISO 9001:2008 Certified

# GLOBAL EXPERIENCE IN TECHNOLOGY SERVICES AND CONSULTING...

*helping our customers reach beyond what they think is possible.*

Zillion Technologies' innovative products bridge the gap between business and technology:

core expertise

- IT Modernization
- Digital Transformation
- Enterprise Mobility
- Cloud Solutions
- Cyber Security
- AI / ML / DL // Analytics
- Testing / QA
- Healthcare Management
- Project Management
- IT Outsourcing
- Software Architecture
- System Engineering




**Call 703.579.6891**

**or visit us at zilliontechnologies.com**

20745 Williamsport Place | Ashburn, VA 20147
Email: anthony@zilliontechnologies.com

# நேர மேலாண்மை: வெற்றியின் இரகசியம்

தொகுப்பு: செல்வன் ஸ்ரீருத்ரேஷ் மணிவண்ணன், பிரடெரிக் தமிழ்ப்பள்ளி, மேரிலாந்து.



வணக்கம். நேர மேலாண்மை வெற்றியின் இரகசியம் பற்றிய என் கருத்துக்களை உங்களோடு பகிர்வதில் மகிழ்ச்சி.

முன்னுரை:

நேர மேலாண்மை நாம் வாழ்வில் வெற்றி அடைவதற்கும், மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் உதவுகிறது. மாணவர்கள் தங்கள் நேரத்தை சரியாகத் திட்டமிடும்போது, படிப்பதற்கும், விளையாடுவதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும், சத்தான உணவை உண்பதற்கும், முறையாக உறங்குவதற்கும் அவர்களுக்குப் போதுமான நேரம் கிடைக்கிறது. சிறந்த நேர மேலாண்மை, மன அழுத்தமின்றி மகிழ்சியுடன் இருக்கவும், உடல் மற்றும் மனதை வலிமையுடன் வைத்திருக்கவும் துணைபுரிகிறது.

### நேர மேலாண்மையைப் பற்றி பாரதியார்:

சிறிய வயதில் இருந்தே நேர மேலாண்மை பற்றி குழந்தைகள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, பாரதியார் “ஓடி விளையாடு பாப்பா” எனத் தொடங்கும் பாடலின் மூலம் எவ்வாறு நேரத்தை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கற்றுக் கொடுத்துள்ளார். நாம் அதிலிருந்து சில வரிகளைப் பார்க்கலாம்.



“காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!”

### காலமறிதல் பற்றி திருவள்ளுவர்:

நேர மேலாண்மையைப் பற்றி திருவள்ளுவர் திருக்குறளில் காலமறிதல் என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டவற்றை நாம் பார்க்கலாம். அவற்றை கடைப்பிடித்தால் நாம் வாழ்வில் வெற்றி அடைவது நிச்சயம்.

### தகுந்த கருவியைப் பயன்படுத்துதல்:

அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

பொருள்:

செய்யும் செயலை முடிப்பதற்கு வேண்டிய கருவிகளுடன் உரிய நேரத்தையும் அறிந்து செயல்பட்டால் செய்ய முடியாதவை என்று எவையுமே இல்லை.

### உரிய இடத்தைத் தேர்வு செய்தல்:

ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்.

பொருள்: உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூட நம் கைக்குள் வந்துவிடும்.

### சிறந்த செயலைச் செய்தல்:

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

பொருள்: கிடைப்பதற்கு அரிய காலம் வாயக்கும்போது அதைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செயற்கரிய செயலைச்செய்து முடிக்க வேண்டும்.

முடிவுரை: நல்ல நேர மேலாண்மை, நாம் பணிகளைச் சரியான நேரத்தில் செய்து முடிக்கவும், மன அழுத்தத்தைக் குறைக்கவும், பொறுப்புணர்வை வளர்க்கவும் உதவுகிறது. திருவள்ளுவர் நமக்கு வழிகாட்டி உள்ளது போல, சிறந்த கருவியைக் கொண்டு, உரிய இடத்தைத் தேர்வு செய்து, சிறந்த செயல்களை உரிய நேரத்தில் செய்தால் நமக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும்.




## Your neigborhood DMV2K Realtor in VA & MD

# All my Commission is yours except 0.5% -1%

*Restrictions Apply

**Umadevi Natarajan**
**Senthil Kumar**
**+1 703 932 5240**
**dmv2krealtor@gmail.com**



IKON
Ikon Realty of Ashburn
(703) 723 3434
44355 Premier Plaza #110, Ashburn, VA 20147

* Buyer needs to pay additional $500 Broker Admin Fee per transaction

**************************************

EQUAL HOUSING OPPORTUNITY

**Licensed in VA, MD, PA, NJ, GA, TX, AZ, CO, MN**

VM
VEMA Mortgage LLC

# Call me Today for Special Rates on Purchase & Refinance!

Scan here to get daily updates on mortgage rates

**SENTHIL KUMAR**
**NMLS # 2494030**
**C: +1 425 503 5147**
**SENTHILKUMAR@VEMAMORTGAGE.COM**

**VEMA MORTGAGE LLC**
**NMLS # 1019911**

**************************************

# ACUPUNCTURE WELLNESS CENTER

**Ashburn, VA**

**Umadevi Natarajan**

**Traditional Acutouch Therapist**

**+1 469 353 9425**

**anbuthirucoil@gmail.com**

**Board Certified Holistic Health Practitioner**

**Certificate Number: 271534401**






## தமிழாக்கம்: செல்வி தியா கமலபாரதி

*(மூலம்: லியோ டால்ஸ்டாய் சிறுகதைகள்)*

இந்தக் கதை லியோ டால்ஸ்டாய் அவர்கள் எழுதிய "How much land does a man need?" என்ற கதையின் தமிழாக்கம். உலகின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகக் கொண்டாடப்படும் லியோ டால்ஸ்டாய் அவர்கள் தன்னுடைய கதைகளில் வரும் நீதிக் கருத்துகளை ஜெர்மன் மொழியில் வாசித்த திருக்குறளில் இருந்து கற்றுக் கொண்டதாகக் கூறி இருப்பது திருக் குறளுக்கும் தமிழுக்குமான சிறப்பு.



செல்வி தியா
கமலபாரதி

பகோம் என்றொரு ஏழை விவசாயி தன் குடும்பத்தோடு கிராமத்தில் வாழ்ந்து வந்தான். ஒருநாள் தன் மனைவியும் அவளது அக்காவும் நகரத்து வாழ்க்கையா அல்லது கிராமத்து வாழ்க்கையா எது சிறந்தது என்று விவாதிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த பகோம், தனக்குள் இப்படி நினைத்துக் கொண்டான் "விவசாய வாழ்க்கையில் நமக்கு இருக்கும் ஒரே குறை போதிய நிலம் இல்லாததுதான். நமக்கு மட்டும் தேவையான அளவு நிலம் கிடைத்துவிட்டால், கடன், பஞ்சம் போன்ற எந்தக் கஷ்டமும் நம்மை ஒன்னும் செய்ய முடியாது!"

அடுப்புக்குப் பின்னால் மறைந்திருந்த கஷ்ட தெய்வம் இதைக் கேட்டுப் புன்னகைத்தது. "உனக்கு நிலத்தைக் கொடுத்து, அதே நிலத்தைக் கொண்டே உன்னை என் வலைக்குள் வீழ்த்துகிறேன்" என்று நினைத்துக் கொண்டது.

விரைவிலேயே பகோமின் ஆசை நிறைவேறத் தொடங்கியது. ஊரில் இருந்த ஒரு பணக்காரர் தன் நிலத்தை விற்க, பகோம் கஷ்டப்பட்டு, கடன் வாங்கி அந்த 40 ஏக்கர் நிலத்தைச் சொந்தமாக்கினான். தன் சொந்த மண்ணைப் பார்த்தபோது அவனுக்குள் அளவற்ற மகிழ்ச்சி. ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. பக்கத்து வீட்டு மாடுகள் தன் நிலத்திற்குள் நுழைந்தபோது அவர்களுக்குள் சண்டை மூண்டது. மனக்கசப்படைந்த பகோம், வோல்கா நதிக்கு அப்பால் இன்னும் பெரிய கூட்டுறவு நிலங்கள் கிடைப்பதையறிந்து, தன் நிலத்தை விற்றுவிட்டு குடும்பத்தோடு அங்கே குடியேறினான். அங்கே அவனுக்கு மூன்று மடங்கு அதிக நிலம் கிடைத்தது.

கூட்டுறவு முறையில் வாடகைக்கு நிலம் எடுத்து விவசாயம் செய்வதில் அவனுக்குத் திருப்தி இல்லை. நிரந்தரமாகத் தனக்கு மட்டுமே சொந்தமான பெரிய நிலம் வேண்டும் என நினைத்தான். அப்போது அந்த ஊருக்கு வந்த ஒரு வியாபாரி, "இங்கிருந்து வெகுதூரத்தில் பாஷ்கிர்கள் (Bashkirs) வாழும் ஒரு பகுதி இருக்கிறது. அங்கிருப்பவர்கள் மிகவும் அப்பாவி மனிதர்கள். வெறும் சொற்பக் காசுக்கு ஆயிரக்கணக் கான ஏக்கர் வளமான நிலங்களை அள்ளித் தருகிறார்கள்" என்று கூறினான்.

பகோம் உடனே பரிசுகளோடு பாஷ்கிர்கள் வாழும் பகுதியை நோக்கிப் புறப்பட்டான். அவர்கள் பகோமை அன்போடு வரவேற்று உபசரித்தார்கள். அவனது ஆசையை அறிந்து, அவர்கள் ஒரு கவர்ச்சிகரமான திட்டத்தை அவனிடம் முன்வைத்தார்கள்:

"வெறும் 1,000 ரூபிள்கள் (இரஷ்ய காசு ) மட்டும் கொடுத்துவிட்டு, நீ ஒரு நாளில் எவ்வளவு நிலத்தைச் சுற்றி நடந்து வருகிறாயோ, அவ்வளவு நிலமும் உனக்கே சொந்தம். நீ சூரிய உதயத்தின் போது நடக்கத் தொடங்க வேண்டும். உன் கையில் இருக்கும் மண்வெட்டியால் நீ செல்லும் பாதையில் எல்லைக் குழிகளை வெட்டி அடையாளப் படுத்திக் கொள்ள

வேண்டும். சூரியன் மறைவதற்குள் நீ புறப்பட்ட அதே இடத்திற்கு—அதாவது குன்றின் மேல் இருக்கும் தலைவரின் தொப்பிக்கு—வந்து சேர்ந்துவிட வேண்டும். ஒரு விநாடி தாமதித்தாலும், நீ கொடுத்த பணத்தை இழந்துவிடுவாய்; உனக்கு ஒரு அடி நிலம் கூட கிடைக்காது."

அன்று இரவு, பகோம் ஒரு பயங்கரமான கனவு கண்டான். அந்தப் பாஷ்கிர் தலைவனும், வழி காட்டிய வியாபாரியும் தன் உடலின் அருகே நின்று கொடூரமாகச் சிரிப்பதைக் கண்டான். கூர்ந்து கவனித்தபோது அவர்கள் அனைவரும் கஷ்ட தெய்வத்தின் உருவங்களாக மாற, அங்கே இறந்து கிடப்பது தாம் தான் என்பதைப் பகோம் திடுக்கிட்டு உணர்ந்தான்.

ஆனால், பேராசை அவனது விழிப்புணர்வை மழுங்கடித்திருந்தது. விடிந்ததும் அவன் தன் ஓட்டத்தைத் தொடங்கினான். அந்த நிலம் அத்தனை செழுமையாக இருந்தது. இன்னும் கொஞ்சம் தூரம் போனால் அந்தப் பச்சைப் புல்வெளியையும் சேர்த்துக்கொள்ளலாம், அந்த நீரோடையையும் வளைத்துப் பிடித்துவிடலாம் என்று அவனது கால்கள் ஓடிக்கொண்டே இருந்தன. மதிய வேளையைக் கடந்தபோதுதான், தான் பேராசையினால் எல்லையைத் தாண்டி வெகுதூரம் வந்துவிட்டதை அவன் உணர்ந்தான்.

மாலைப் பொழுது நெருங்க நெருங்க, அவனது ஓட்டம் ஒரு மரண ஓட்டமாக மாறியது. உச்சி வெயில் சுட்டெரித்தது, கால்களில் இரத்தம் கசிந்தது, மூச்சுக் காற்றில்லாமல் தவித்தது, இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. ஆனாலும் நிலத்தை இழந்துவிடக் கூடாது என்று ஓடினான். தன் உடலின் இறுதி சொட்டு ஆற்றலையும் திரட்டி, சூரியனின் கடைசி கதிர் மறைவதற்குள் பாய்ந்து சென்று தொடங்கிய இடத்தைத் தொட்டான் பகோம். அவன் பந்தயத்தில் ஜெயித்துவிட்டான்!

ஆனால், அவனது வேலைக்காரன் ஓடிவந்து அவனைத் தூக்க முயன்றபோது, பகோமின் வாயிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவன் அங்கேயே சுருண்டு விழுந்து இறந்தான். பாஷ்கிர்கள் பரிதாபத்தோடு பார்த்தனர்.

வேலைக்காரன் அந்த மண்வெட்டியை எடுத்தான். பகோமின் தலை முதல் கால் வரை அடங்கும் அளவுக்கு ஒரு எளிய குழியைத் தோண்டினான். அவனை அந்த இடத்திலேயே புதைத்தான்.

டால்ஸ்டாய் இந்த உலகப் புகழ்பெற்ற கதையை, மனித குலத்தின் பேராசையை இந்த ஒற்றை இறுதி வரியோடு நிறைவு செய்கிறார்:

"அவனது தலை முதல் கால் வரை அடங்குவதற்குத் தேவையான அந்த ஆறு அடி நிலமே, அவனுக்கு இறுதியாகத் தேவைப்பட்டது."



*குறள் 366 (அறத்துப்பால் - துறவறவியல், அதிகாரம்: அவாவறுத்தல்)*

**அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை**
**வஞ்சிப்ப தோரும் அவா.**

ஒருவரை வஞ்சித்துக் கெடுப்பதற்குக் காரணமாக இருப்பது ஆசையேயாகும் எனவே, ஆசைக்கு அடிமையாகக் கூடாது என்ற அச்சத்துடன் வாழ வேண்டும்.


**முத்தமிழ் விழா வாழ்த்துகள்**



**ஆண்டி சாவித்திரி கிரி & ஜெகதா கிரி ஓவியா கிரி, அகிலன் கிரி, நேயா கிரி**

SOFTSQUARE LLC, CHENNAI / USA



# எனக்குப் பிடித்த பருவகாலம் – இலையுதிர் காலம்

செல்வன் அதர்வா பிரேம்ஆனந்த், பிரடெரிக் தமிழ்ப்பள்ளி, மேரிலாந்து.

எனக்குப் பிடித்த பருவகாலம் - இலையுதிர் காலம் பற்றிய என் கருத்துக்களை உங்களோடு பகிர்வதில் மகிழ்ச்சி.

### முன்னுரை

நம் நாட்டில் பல பருவகாலங்கள் உள்ளன. அவற்றில் எனக்கு மிகவும் பிடித்தது இலையுதிர் காலம். இந்த காலத்தில் இயற்கை மிகவும் அழகாக மாறுகிறது.

இலையுதிர் காலத்தின் அழகு

இலையுதிர் காலத்தில் மரங்களின் இலைகள்

- மஞ்சள்
- ஆரஞ்சு
- சிவப்பு

நிறங்களில் மாறி தரையில் விழும். இந்த நிறங்களைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படும்.

### குளிர்ந்த காற்று

இந்த காலத்தில் குளிர்ந்த, மெதுவான காற்று வீசும். அது எனக்கு மிகவும் இனிமையாக இருக்கும். வெளியே நடக்கும்போது இலைகள் சலசலக்கும் சத்தம் கேட்பது மிகவும் அழகாக இருக்கும்.



அதர்வா பிரேம்ஆனந்த்

### பள்ளி ஆரம்பம்

இலையுதிர் காலத்தில் பள்ளி மீண்டும் ஆரம்பமாகும். நான் புதிய புத்தகங்கள், புதிய வகுப்பு, புதிய நண்பர்கள் இவை எல்லாம் எனக்கு புதிய உற்சாகத்தைத் தருகின்றன.

### விளையாட்டு நேரம்

இலையுதிர் காலத்தில் வானிலை குளிர்ச்சியாக இருக்கும். அதனால் வெளியே விளையாட மிகவும் வசதியாக இருக்கும். நான் நண்பர்களுடன் ஓடிப்போய் விளையாடுவேன், பந்துவீச்சு விளையாட்டுகள் ஆடுவேன்.

### முடிவுரை

இலையுதிர் காலம் அழகான நிறங்கள், குளிர்ந்த காற்று, பள்ளி ஆரம்பம், இவை எல்லாம் எனக்கு மிகவும் மகிழ்ச்சி தருகின்றன. அதனால் இலையுதிர் காலம் எனக்குப் பிடித்த பருவகாலம்.


CYBERSECURITY
HEALTHCARE IT
CLOUD COMPUTING
BIG DATA
TRANSFORMING ORGANIZATIONS INTO
HIGH-PERFORMANCE BUSINESSES » IS OUR COMMITMENT.
BUSINESSINTEGRA
TOGETHER » IT IS DONE
BUILDING HIGH-PERFORMANCE BUSINESS
PRATHIBA RAMADOSS, PRESIDENT & CEO
SELVA JAYARAMAN, EVP & CTO
6550 Rock Spring Drive
Suite 450
Bethesda, MD 20817
Telephone: 301-474-9600
www.businessintegra.com
Inc. 500
CMMI LEVEL 3
Certified ISO 9001:2008
Information Security Management Certified ISO 27001:2013
Certified Service Management Systems ISO 20000:2011

# குழந்தைகளின் ஓவியங்கள்





அனோசி
குணாளன்




கபிலன்
தினேஷ்





கவின்
விஸ்வசாரதி




தக்சயா
தியாகு




தர்மேஷ்
தியாகு




நிறைமதி
இராஜேஷ்குமார்





மிதுன்
ஹர்ஷா





லக்ஷிதாஶ்ரீ
கணேசமூர்த்தி





மோசிகா
இராஜேஷ்குமார்





ருஹான்






இலக்கியா பாலமுருகன்






ஹாஸினி விஸ்வசாரதி





ஷ்ரவன் மணிகண்டன்

# இரு படங்களுக்கும் உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்களேன்!

**ஆக்கம்: செல்வி கீர்த்தனா கணேஷ்**







**விடைகள்: 25 பக்கம் பார்க்க...**




# என் மொழி என்அடையாளம்

செல்வன் அருள் இரத்தினம், பிரடெரிக் தமிழ்ப்பள்ளி, மேரிலாந்து.



என் மொழி என் அடையாளம் என்பது மிகவும் அழகான உண்மை. நாம் யார் என்பதை உலகிற்குக் காட்டுவது நம் மொழி தான், நான் பேசும் மொழி தமிழ். தமிழ் எனக்கு மிகவும் பிடித்த மொழி, உலகின் பழமையான மொழிகளில் ஒன்று. தமிழ், பழமையான மொழி பண்பட்ட மொழி பைந்தமிழ் மொழி தேனினும் இனிய தீந்தமிழ் மொழி.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் முண்டாசுக் கவிஞர் பாரதி.

தமிழ் என்றால் அழகு, தமிழ் என்றால் இனிமை, தமிழ் என்றால் அறிவு, தமிழ் என்றால் புதுமை, தமிழ் என்றால் எளிமை.

"தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழ் மொழி மீது தமிழர்களுக்கு அளவு கடந்த பற்றுண்டு. நம் முன்னோர்கள் தமிழ் மூலம் பல நல்ல விஷயங்களைச் சொல்லி இருக்கிறார்கள். திருக்குறள் போன்ற நூல்கள் நல்ல நெறிகளைக் கற்பிக்கின்றன. தமிழ் மொழியையும் கலாச்சாரத்தையும் அடையாளத்தின் ஒரு முக்கிய பங்காகக் கொண்டிருக்க வேண்டும், உலகின் பழமையான கலாச்சாரங்களில் ஒன்றாகும் நம் தமிழ்க் கலாச்சாரம்.



நாம் செய்ய வேண்டியது, தமிழ் மொழியை தினமும் பேச வேண்டும் பள்ளியிலும் வீட்டிலும் தமிழ் பேசப் பழக வேண்டும். பிற மொழிகள் கற்றாலும் தமிழ்மொழியை நம் உயிர் போல் எண்ண வேண்டும். நம் அடையாளம் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டது, தமிழைக் கொண்ட அனைவரும் தமிழர் என்பர். தமிழ் நூற்றாண்டுகள் கடந்து இன்னும் வளர வேண்டும் நாம் வாழவைப்போம். தாய்மொழி பற்றிய விழிப்புணர்வு நமக்கு அவசியம் வேண்டும். மகாகவி பாரதிக்கு தாய்மொழியின் மீது அளவற்ற அன்பு "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" 16 மொழிகள் கற்ற அந்த மகாகவிக்கு தாய்மொழி தமிழ் மொழியாம்.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலைமையை நாம் நம் இல்லத்திலும் நம் உள்ளத்திலும் கொண்டு வர வேண்டும்.

## சொல்விளையாட்டு
### விடைகள்

கண்ணீர்
மீன்விழி





# கவினும் அம்மாவும் உணவே மருந்து 3

தொகுப்பு: செல்வன் கவின் விஸ்வசாரதி மற்றும் திருமதி கீதா தேவி சுந்தர்ராஜ்



குழந்தைகளின் ஆரோக்கிய மான வளர்ச்சிக்கு சத்தான உணவும் நல்ல பழக்கங்களும் மிகவும் அவசியம். தமிழர் பாரம்பரிய உணவுகளில் பல ஆரோக்கிய இரகசியங்கள் மறைந்து இருக்கின்றன.

**பள்ளியில் கற்ற புதிய விஷயம்:**

பள்ளியில் இருந்து வந்த கவின் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

“அம்மா! இன்று ஆசிரியர் ‘உ’ மற்றும் ‘ஊ’ எழுத்தில் தொடங்கும் உணவுகள் பற்றி சொல்லிக் கொடுத்தார்,” என்றான்.

அம்மா சிரித்தபடி கேட்டார்: “அப்படியா? என்ன உணவுகள்?”

**கவின் உற்சாகமாக சொன்னான்:**

“‘உ’ என்றால் உளுந்து! ‘ஊ’ என்றால் ஊறுகாய்!”

அம்மா மகிழ்ச்சியுடன் கூறினார்:

“மிக நல்ல தேர்வு கவின்! உளுந்து நம் பாரம்பரிய உணவுகளில் மிகவும் முக்கியமானது.”

**உளுந்தின் சிறப்பு:**

அம்மா விளக்க ஆரம்பித்தார்:

“உளுந்தில் புரதச்சத்து, இரும்புச்சத்து, கால்சியம் போன்ற பல சத்துகள் இருக்கின்றன. இது உடலுக்கு பலம் தரும். எலும்புகளை வலுப்படுத்தும். வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு இது மிகவும் நல்ல உணவு.”

“அதனால்தான் இட்லி, தோசை, வடை, உளுந்தங்கஞ்சி போன்ற உணவுகளில் உளுந்தைப் பயன்படுத்துகிறார்கள்.”

கவின் ஆச்சரியமாகக் கேட்டான்:

“அம்மா! நான் சாப்பிடும் இட்லியிலும் இத்தனை நல்ல சத்து இருக்கிறதா?”

அம்மா சிரித்தார்.

“ஆம் கவின்! நம் பாரம்பரிய உணவுகள் எல்லாமே ஆரோக்கியத்தை நினைத்தே உருவாக்கப்பட்டவை.”

**கவினின் புதிய விடுகதை**

கருப்பு நிறத்தில் இருப்பேன், அரைத் தால் மாவாக மாறுவேன், இட்லிக்கும் தோசைக்கும் நண்பனாவேன், உடலுக்கு பலம் தருவேன் - நான் யார்?

பதில்: உளுந்து

**ஊறுகாயின் சுவை**

பிறகு கவின் கேட்டான்:

“அம்மா! ஊறுகாய் நல்லதா?”

அம்மா விளக்கினார்:

“ஊறுகாய் உணவுக்கு சுவை சேர்க்கும். மாங்காய் ஊறுகாய், எலுமிச்சை ஊறுகாய் போன்றவை நம் வீட்டில் பாரம்பரியமாக செய்யப்படும் உணவுகள். ஆனால் அதை அளவோடு சாப்பிட வேண்டும்.”

“ஏன் அம்மா?” என்று கவின் கேட்டான்.

“ஊறுகாயில் உப்பு மற்றும் காரம் அதிகமாக இருக்கும். கொஞ்சம் சாப்பிட்டால் சுவையும் ஆர்வமும் தரும். ஆனால் அதிகமாக சாப்பிட்டால் உடலுக்கு நல்லதல்ல.”

**கவினின் இன்னொரு விடுகதை**

உணவுடன் சேர்ந்து வருவேன், சிறிதளவு சாப்பிட்டால் சுவை தருவேன், மாங்காயிலும் எலுமிச்சையிலும் செய்வார்கள் - நான் யார்?

பதில்: ஊறுகாய்

அன்று கவின் ஒரு புதிய விஷயத்தை கற்றுக்கொண்டான் —

பாரம்பரிய உணவுகளில் சுவையும் சத்தும் இரண்டும் இருக்கின்றன. ஆனால் எல்லாவற்றையும் அளவோடு சாப்பிடும் பழக்கம்தான் நல்ல ஆரோக்கியத்தைத் தரும். ஒரு நல்ல உணவுப் பழக்கம், ஒரு நல்ல உடல்நலம், ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கும்.

நல்ல உணவு - நல்ல உடல் - நல்ல வாழ்க்கை


முத்தமிழ் விழா வாழ்த்துகள்

Protax & Accounting Services

701, Jackson Road, Silver Spring, MD 20904

Online Tax Consultation and Preparation services are available.

Individual • BUSINESS

Non-profit Organization

Please call me at (301) 573 8574 or send an email to peter.yeronimuse@gmail.com

Peter Yeronimuse M.com., EA., CFE.,

Enrolled Agent with Internal Revenue Service & Certified Fraud Examiner




# ஆறு வித்தியாசங்கள் விடைகள்

செல்வி கீர்த்தனா கணேஷ்





# நேர மேலாண்மை: வெற்றியின் இரகசியம்

செல்வி ஹாசினி விஸ்வசாரதி, பிரடெரிக் தமிழ்ப்பள்ளி, மேரிலாந்து.

வணக்கம். நேர மேலாண்மை - வெற்றியின் இரகசியம் பற்றிய என் கருத்துக்களை உங்களோடு பகிர்வதில் மகிழ்ச்சி.

### முன்னுரை:

இன்றைய வேகமான வாழ்க்கையில் நேரத்தை சரியாக பயன்படுத்துவது மிகவும் முக்கியம். இதையே "நேர மேலாண்மை" என்று கூறுகிறோம். நமக்கு தினமும் 24 மணி நேரம் மட்டுமே கிடைக்கிறது. அந்த நேரத்தை நன்றாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தினால் நம்மால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். நேரம் என்பது மிகவும் விலைமதிப்புள்ள ஒன்று; அது ஒருமுறை போனால் திரும்பக் கிடைக்காது.

### நேர மேலாண்மை: திட்டமிடுதல்

நேர மேலாண்மை என்பது நம்முடைய வேலைகளை திட்டமிட்டு செய்வது. முதலில் நம்முடைய இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். பிறகு முக்கியமான வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செய்ய வேண்டும். ஒரு அட்டவணை போட்டு வேலை செய்தால் நம்மால் நேரத்தை வீணாக்காமல் இருக்க முடியும்.

### நேர மேலாண்மை: அவசியம்

மாணவர்களுக்கு நேர மேலாண்மை மிகவும் அவசியம். அவர்கள் படிப்பு, வீட்டுப்பாடம், விளையாட்டு, குடும்பத்துடன் செலவிடும் நேரம் அனைத்தையும் சமநிலைப்படுத்த வேண்டும். இதனால் மன அழுத்தம் குறையும் மற்றும் நன்றாகப் படிக்க முடியும்.

**நேரத்தை சரியாகப் பயன்படுத்தினால்:**
**வேலைகளை நேரத்தில் முடிக்க முடியும்**
**மன அழுத்தம் குறையும்**
**அதிக உற்பத்தித்திறன் கிடைக்கும்**
**வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்**

ஒரு நேரத்தில் ஒரு வேலையை கவனமாகச் செய்தால் அது விரைவாகவும் நன்றாகவும் முடியும்.



**செல்வி ஹாசினி விஸ்வசாரதி**

### முடிவுரை

மொத்தத்தில், நேர மேலாண்மை என்பது நம் வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு முக்கியமான திறன். நாம் நேரத்தை சரியாகப் பயன்படுத்தினால் நம் இலக்குகளை எளிதில் அடைய முடியும். எனவே, ஒவ்வொருவரும் தங்கள் நேரத்தை புத்திசாலித்தனமாக பயன்படுத்தி வெற்றிகரமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ வேண்டும்.


இபாட்டி
iPaatti
Chantilly, VA
Saturdays
கூடு
செயல்வழிக் கல்வி | கலைவழிக் கல்வி
ACTIVITY-BASED LEARNING | TRADITIONAL ART FORMS
தனித்துவமான தமிழ்ப் பள்ளி!
Now Hiring Tamil Teachers!
Learn to Speak. Read. Write. Tamil the joyful way!
Age 3 to 14 Years Old
தற்காப்புக் கலைகள்
மரபுக் கலைகள்
கதைகள்
கணிதம்
வாழ்வியல் செயல்பாடுகள்
பாடல்கள் + விளையாடுகள்
SCAN
ENROLL NOW
+1 (703) 966-1633
+1 (703) 901-7904
ipaatti.us

# வரலாற்றுப் பாதையில் ஒரு பயணம்: அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்

**தொகுப்பு: செல்வி இனயா நிசாமுதீன்**

**கோல்டன் நுழைவுப்பாலம் (கேட் பிரிட்ஜ்)**



**லிங்கன் நினைவகம் (மெமோரியல்)**





**செல்வி இனயா நிசாமுதீன்**

## கோல்டன் நுழைவுப்பாலம் (கேட் பிரிட்ஜ்)

கோல்டன் நுழைவுப்பாலம் (கேட் பாலம்) உலகின் மிகவும் அதிகமாகப் புகைப்படம் எடுக்கப்படும் பாலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அடிக்கடி பனிமூட்டத்தில் மூடப்பட்டிருக்கும் இந்தப் பாலம், இயற்கை அழகும் மனித பொறியியலும் இணைந்த அற்புதமாகப் பார்க்கப்படுகிறது. பாலத்தின் நீளம் சுமார் 2.7 கிலோமீட்டர் ஆகும். கட்டுமானம் நடைபெற்ற காலத்தில் இது உலகின் நீளமான தொங்குபாலமாக இருந்தது. பல திரைப்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் சுற்றுலா விளம்பரங்களில் இந்தப் பாலம் இடம்பெற்றுள்ளது. இரவு நேரத்தில் விளக்குகளால் ஒளிரும் அதன் தோற்றம் மிகவும் அழகாக இருக்கும்.

## லிங்கன் நினைவகம் (மெமோரியல்)

லிங்கன் நினைவகம் அமெரிக்க மக்களின் ஒற்றுமை மற்றும் சமத்துவத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. நினைவகத்தின் உள்ளே இருக்கும் ஆபிரகாம் லிங்கனின் சிலை சுமார் 19 அடி உயரம் கொண்டது. இந்த இடத்தின் முன்பாகவே 1963 ஆம் ஆண்டு Martin Luther King Jr. தனது புகழ்பெற்ற “I Have a Dream” உரையை நிகழ்த்தினார். நினைவகத்தின் முன்புறத்தில் உள்ள நீர்நிலையும் சுற்றியுள்ள தூண்களும் கிரேக்கக் கோவில் வடிவமைப்பை நினைவூட்டுகின்றன.

அமெரிக்க வரலாற்றிலும் மனித உரிமை இயக்கங்களிலும் முக்கியப் பங்கு வகித்த இடமாக இது உலகம் முழுவதும் மதிக்கப்படுகிறது.


MINNODI LLC
Aavanee
Level Up Your Career with Expert IT
FREE TRAINING PROGRAMS
Designed to enhance your skills, knowledge, and career prospects, these trainings offer a unique opportunity to stay ahead in today's competitive landscape.
JOIN US NOW!
Courses Offered:
• Mastering in IT Basics
• Human Resource Management
• Business Development /Proposal Management
• Cyber Security basics
• AI for Business Resilience
• AI Tools for Software Development
• AI for the Manufacturing Industry
Highlights:-
• Hands-on experience
• Beginner-friendly
• Experienced trainers
• Real-time applications
• Online learning mode
Contact us - admin@minnodillc.com/
(301) 874-2785
REGISTER NOW
Asian American Center of Frederick
Enhance. Empower. Enrich.
MARYLAND
Hispanic Chamber of Commerce


Global Alliant
"Deliver IT Right"
GLOBAL ALLIANT
http://www.globalalliant.com


GLS
FINANCIAL EMPOWERMENT
SINTHU PILLAI
(781) 552-9572
SINTHU PILLAI
• Guaranteed Life Time Income
• Long Term Care
• Life Insurance With Living
• Benefits (Term & IUL)
• Ira/401(k) Rollover
• Investment Against Market Risk
• Retirement Planning
• College Planning
• Will & Trust
Let's Talk About
Your Financial Goals!
sinthu.gls@gmail.com
7815529572



## பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் 15ஆம் ஆண்டு விழா 2026

# தமிழ் மொழி, பண்பாடு மற்றும் மாணவர் சாதனைகளைப் போற்றிய சிறப்புமிக்க விழா

**தொகுப்பு: திருமதி சுஹாசினி ஜெகன்நாதன்**

கடந்த ஜூன் மாதம் 6ஆம் தேதி நடைபெற்ற பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் 15ஆம் ஆண்டு விழா, தமிழ் மொழி, பண்பாடு மற்றும் மாணவர்களின் கல்விச் சாதனைகளை கொண்டாடும் வகையில் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு, மகிழ்ச்சியும் பெருமிதமும் நிறைந்த ஒரு நாளைக் கொண்டாடினர்.


Ms. Caroline Schlegel

பள்ளியின் செயலாளர் திருமதி ஷோபனா வெங்கடசாமி அவர்களின் வரவேற்புரை மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆண்டு விழா இனிதே தொடங்கியது. தனது உரையில்,பள்ளியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தொடர்ந்து ஆதரவளித்து வரும் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு அவர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். மேலும், தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் பள்ளியின் பணியின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இவ்விழாவிற்கு வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கச் செயற்குழு உறுப்பினர்கள், பல்வேறு தமிழ்ப்பள்ளிகளின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் கல்வித் துறை சார்ந்த சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். அவர்கள் வழங்கிய வாழ்த்துரைகள், தமிழ் மொழிக் கல்வியின் அவசியத்தையும், தாய்மொழியுடன் மாணவர்கள் கொண்டிருக்க வேண்டிய



பிணைப்பையும் வலியுறுத்தின.

பள்ளியின் வெற்றிக்குப் பின்னால் அயராது உழைக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்பும் இவ்விழாவில் சிறப்பாகப் பாராட்டப்பட்டது. ஆண்டு முழுவதும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், பள்ளி நிகழ்வுகளின் திட்டமிடல் மற்றும் செயல்பாட்டிற்காகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. அவர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் அங்கீகாரப் பரிசுகள் வழங்கப்பட்டன.



**திருமதி சுஹாசினி ஜெகன்நாதன்**

மேலும், பள்ளி மற்றும் சமூக நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்கேற்று உதவி செய்த தன்னார்வ மாணவர்களும் சிறப்பு அங்கீகாரம் பெற்று கௌரவிக்கப்பட்டனர். இளம் வயதிலேயே சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு, பிறருக்காக நேரத்தை ஒதுக்கிய அவர்களின் சேவை மனப்பான்மை அனைவராலும் பாராட்டப்பட்டது.

விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் பள்ளியின் செயல்பாடுகள் மற்றும் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் குறித்து தங்கள் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் பகிர்ந்து கொண்டனர்.

*Ms. Caroline Schlegel*, உலக மொழி நிபுணர் (*World Language Specialist*), FCPS, தனது கருத்தில், “உங்களின் அன்பான விருந்தோம்பலை நன்றி என்ற வார்த்தையால் முழுமையாக என்னால் வெளிப்படுத்த முடியாது. மொழி மற்றும் பண்பாட்டின் மீது ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயல்படும் ஆசிரியர்கள், மாணவர்கள், தலைவர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களுடன் இணைந்து இருப்பது எனக்குப் பெருமையாக இருந்தது. இது உண்மையிலேயே ஒரு துடிப்பான கொண்டாட்டமாக அமைந்தது. மொழியும் பண்பாடும் செழுமையாக வெளிப்பட்ட விதம் தமிழை உயிர்ப்புடன் உணரச்செய்தது. பிரடெரிக் தமிழ்ப்பள்ளியுடன் இந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டது எனக்குப் பெரும் மரியாதையாகும்” என்று தெரிவித்தார்.

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகத்தின் நிறுவனர் தலைவர் முனைவர் திரு. அரசு செல்லையா அவர்கள், “தலைமுறை தாண்டியும் தமிழ் என்பதை உங்கள் பள்ளி நிகழ்வுகள் காட்டுகிறது! மேலும் வளர்க!” என்று வாழ்த்து தெரிவித்தார்.

திரு. நாஞ்சில் பீற்றர் அவர்கள், “அனைத்து நிகழ்வுகளும் அருமை, விருந்தோம்பல் உச்சம்!” என்று பாராட்டினார்.

வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் திரு. அறிவுடை நம்பி புகழேந்தி அவர்கள், “வாசிங்டன் தமிழ்ச்சங்க நிகழ்வுகளில் உங்கள் பள்ளியின் பங்களிப்பு மிகச் சிறப்பு” என்று குறிப்பிட்டு பள்ளியின் சமூகப் பங்களிப்பை பாராட்டினார்.

ஆண்டு விழாவின் சிறப்பம்சங்களில் ஒன்றாக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் அமைந்தன. பல்வேறு நிலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பாரம்பரிய மற்றும் நவீன நடனங்கள், இசைக்கருவி வாசிப்புகள், குழுப் பாடல்கள் மற்றும் கருத்துள்ள நாடகங்களை அரங்கேற்றி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் மாணவர்களின் திறமை, பயிற்சி மற்றும் தமிழ்க் கலாச்சாரத்தின் மீதான அவர்களின் ஈடுபாட்டை வெளிப்படுத்தியது. குறிப்பாக சமூகப் பொறுப்பு, தமிழ் மரபுகளை மற்றும் தமிழ் மொழியின் சிறப்புகளை மையமாகக் கொண்ட நாடகங்கள் அனைவரையும் சிந்திக்க வைத்தன.

மாணவர்களின் பல்துறை திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் ஆண்டு முழுவதும் நடத்தப்பட்ட போட்டிகளில் சிறந்து விளங்கிய மாணவர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர். பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி, கட்டுரை மற்றும் எழுத்துப் போட்டி, சுட்டிகளின் கதை, சதுரங்கம், எழுத்துத்தேனீ, வினாடி வினா மற்றும் வார்த்தை விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தங்கள் திறமைகளை நிரூபித்ததால் மாணவர்களுக்கு பரிசுக் கோப்பைகள் வழங்கப்பட்டன. இந்த அங்கீகாரம் மாணவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்துவதோடு,










எதிர்கால சாதனைகளுக்கான ஊக்கமாகவும் அமைந்தது.

விழாவின் மிக முக்கியமான நிகழ்வாகப் பட்டமளிப்பு விழா இடம்பெற்றது. பல்வேறு நிலைகளை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். குறிப்பாக 10ஆம் நிலையை வெற்றிகரமாக முடித்த 15 மாணவர்கள் பட்டம் பெற்று மேடையேறிய தருணம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. பல ஆண்டுகளாகத் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டைக் கற்று வளர்ந்த இம்மாணவர்களின் சாதனை பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களால் பெருமையுடன் கொண்டாடப்பட்டது. அவர்களின் இந்த வெற்றி, தமிழ்க் கல்வியின் தொடர்ச்சிக்கும் அதன் முக்கியத்துவத்திற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. தன்னார்வமாணவர்களுக்காகவும், தன்னார்வலர்களுக்காகவும் மதிய உணவு வழங்கப்பட்டு அவர்களின் அர்ப்பணிப்பிற்கு நன்றியுணர்வு தெரிவிக்கப்பட்டது.

ஆண்டு விழாவை சிறப்பாக வடிவமைத்த நிர்வாகக் குழுவிற்கு மனமார்ந்த பாராட்டுகள். பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் வளர்ச்சிப் பயணத்தில் நிர்வாகக் குழுவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். முக்கியமாக, பள்ளியைத் தலைமை தாங்கி வழிநடத்தி வரும் முனைவர் பாலா குப்புசாமி அவர்கள், தனது தொலைநோக்குப் பார்வை, சிறந்த வழிகாட்டும் திறன் மற்றும் கல்வி மேம்பாட்டில் காட்டி வரும் அக்கறை ஆகியவற்றின் மூலம் பள்ளியின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வருகிறார். அவரது தன்னலமற்ற சேவை, ஒழுங்குமுறை நிர்வாகம் மற்றும் தமிழ்மொழி மீதான ஆழ்ந்த பற்றுதல் ஆகியவை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் தொடர்ந்து ஊக்கமளித்து வருகின்றன. பள்ளியின் பல்வேறு முயற்சிகளும் சாதனைகளும் அவரது அர்ப்பணிப்பான தலைமையின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளன.

இந்த ஆண்டு விழா ஒரு கல்வி நிகழ்வாக மட்டுமல்லாமல், தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் சமூகத்தின் ஒற்றுமை, அர்ப்பணிப்பு மற்றும் உறுதியை வெளிப்படுத்தும் விழாவாகவும் அமைந்தது. மாணவர்களின் சாதனைகள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பெற்றோரின் ஆதரவு, தன்னார்வலர்களின் பங்களிப்பு மற்றும் பள்ளி நிர்வாகத்தின் தொலைநோக்கு முயற்சிகள் ஆகிய அனைத்தும் இணைந்து இவ்விழாவை வெற்றிகரமாக மாற்றின.

நிகழ்ச்சியின் நிறைவாக அமெரிக்கா மற்றும் இந்தியாவின் தேசிய கீதங்கள் மரியாதையுடன் இசைக்கப்பட்டன. அனைவரும் எழுந்து நின்று தேசிய கீதங்களுக்கு மரியாதை செலுத்தியதன் மூலம், தாங்கள் வாழும் நாட்டிற்கும் தங்கள் பாரம்பரியத் தாய்நாட்டிற்கும் மதிப்பையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தினர். இந்த உணரவுப்பூர்வமான தருணம் விழாவிற்கு சிறப்பான நிறைவாக அமைந்தது.

மகிழ்ச்சியான நினைவுகளுடனும் புதிய உற்சாகத்துடனும் நிறைவடைந்த பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் 15ஆம் ஆண்டு விழா, தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒரு முக்கியமான நிகழ்வாக என்றும் நினைவில் நிலைத்திருக்கும்.




250+
Arangetrams
Honored with
LIFETIME ACHIEVEMENT IN
CULTURAL PHOTOGRAPHY AWARD
from the U.S. India SME Council, Inc.
75+
Weddings
Celebrity Concerts
Corporate Events
Serving Washington DC Metro Area and Beyond, U.S.A.
Siva Sottallu PHOTOGRAPHY
Photos, Videos & More
We extend our warmest wishes
to one and all on this
special occasion
+1 443-878-5116
siva.sottallu@gmail.com
SivaSottalluPhotography.com
@SivaSottallu



# வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் சித்திரை விழாக் கொண்டாட்டம்

**தொகுப்பு: திரு. கிஷோர் சிங்**



ஒவ்வோர் ஆண்டும் வசந்த காலத்தின் வருகை மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். எங்கள் தோட்டத்தில் உள்ள மல்லிகை மற்றும் ரோஜா செடிகளில் புதிய மொட்டுகள் நிறைந்து காணப்படும், அதோடு காற்றில் புத்துணர்ச்சி நிறைந்திருக்கும். இந்த மகிழ்ச்சியுடன் சேர்ந்து, நம் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் வழங்கும் சித்திரை விழா அறிவிப்பும் வந்தது. இந்த ஆண்டு அறிவிப்பு மிகவும் உற்சாகமாக இருந்தது. எனக்கு மிகவும் பிடித்த உள்ளூர் இசைக்குழுவான 'இரசிகா' இந்த நிகழ்வில் இசை நிகழ்ச்சி நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

நிகழ்ச்சிக்காக சென்னை எக்ஸ்பிரஸ் ஏற்பாடு செய்த வாழை இலையில் பரிமாறப்படும் விருந்துக்காக நான் முன்பதிவு செய்திருந்தேன், மேலும் நிகழ்வுக்காக ஆவலுடன் காத்திருந்தேன். மேலும், சென்னையிலிருந்து வந்திருந்த எனது நண்பர் பார்த்திபனையும் அழைத்திருந்தேன்.

சித்திரை விழா, மிகச் சிறந்த வாழை இலை விருந்துடன் தொடங்கியது; சைவம் மற்றும் அசைவம் இரண்டிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பரிமாறப்பட்ட பிரியாணி மிக அருமையாக இருந்தது. நாங்கள் இருவரும் மனநிறைவுடன் உணவு உண்ட பின், பல்வேறு விற்பனையாளர் கடைகளைக் கடந்து சுற்றினோம். தோழிகளின் சமையல் வழங்கிய இனிப்புகள் மற்றும் சிற்றுண்டிகளைச் சுவைத்தோம், பின்னர் உற்சாகமான நிகழ்ச்சிகளை காண அரங்குக்குச் சென்றோம்.

மிகுந்த மகிழ்ச்சியுடன் நிகழ்ச்சி மேரிலாந்து மற்றும் விர்ஜீனியாவி லிருந்து வந்த குழந்தைகளின் சிறப்பான மற்றும் உற்சாகமான நடனங்களுடன் தொடங்கியது. பல்வேறு பாடல்களுக்கு அவர்கள் ஆடிய நடனங்கள் பார்வை யாளர்களை முழுமையாகக் கவர்ந்தன. அதன் பின்னர் பெரியவர்களும் சிறந்த நிகழ்ச்சிகளை வழங்கினர்.

சித்திரை விழா தென்றல் முல்லை மாத இதழ் வெளியீடு இல்லாமல் முழுமையடையாது. இதழின் முதன்மை ஆசிரியர் முனைவர் பாலமுருகன் குப்புசாமி அவர்களின் தலைமையில் அவரது குழு இந்த இதழை எப்போதும் சிறப்பாகத் தொகுத்து வழங்குகிறார்கள். இதில் உறுப்பினர்கள் மற்றும் இளம் எழுத்தாளர்களின் சிறந்த கட்டுரைகளும், குழந்தைகளின் பல வண்ண ஓவியங்களும் இடம்பெற்றிருந்தன.

மாலை தேநீர் அருந்திய பிறகு, நான் ஆவலுடன் காத்திருந்த முக்கிய நிகழ்வான இரசிகா இசைக்குழுவின்







கச்சேரி தொடங்கியது. இரசிகா பற்றி அறிமுகப்படுத்துவதற்காக, இந்தப் பகுதியில் உள்ள பிட்ஸ் பிலானி முன்னாள் மாணவர்களால் உருவாக்கப்பட்ட குழுவாகும், முக்கியமாக சுந்தர் மற்றும் ரகு ஆகியோரால் உருவாக்கப்பட்ட இந்தக் குழு, இசை மீது கொண்ட ஆர்வமும், நட்பும் பல தசாப்தங்களாக இணைந்திருந்தது. அவர்கள் பொதுவாக வாசிங்டன் வட்டாரப் பகுதியில் பல தொண்டு நோக்கங்களுக்காக இசை நிகழ்த்துகிறார்கள்.

கச்சேரியின் தொகுப்பாளரான ஆர்த்தி ஸ்ரீனிவாசன் இசைக்குழுவைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தி, பாடகர்கள் ரகு, ஹரிணி மற்றும் ஷீபா ஆகியோரை அறிமுகப்படுத்தினார். கீபோர்டில் சுந்தர், பேஸ் மற்றும் லீட் கிட்டார் தேஜ் மற்றும் ஸ்ரீராம் வாசித்தார்கள். இந்தக் கச்சேரியின் சிறப்பம்சமாக, அமெரிக்கச் சுற்றுப்பயணத்தில் இருந்த டிரம்ஸ் கலைஞர் ஃபெர்னாண்டஸ், இரசிகா குழுவுடன் இணைந்து இசை வழங்கினார்.

ரசிகா இசைக்குழு இளையராஜா மற்றும் ஏ. ஆர். ரஹ்மான் இசைத் தொகுப்பை மிகச் சிறப்பாகக் கோர்த்து வழங்கியது. கண்ணன் வந்து பாடுகின்றான், கோடைக்கால காற்றே, செண்பகமே செண்பகமே, உயிரே உயிரே, மலர்களே மலர்களே போன்ற பாடல்களும், பம்பாய் திரைப்படத்தின் இசையும் நேரடி இசைக்குழுவின் மூலம் கேட்டது மிகவும் மனமகிழ்ச்சியாக இருந்தது.

பாடகர்கள் ரகு, ஹரிணி மற்றும் ஷீபா மிகச் சிறப்பாகப் பாடி, பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்தனர். நிச்சயமாக, இது மறக்க முடியாத ஒரு இசை விருந்தாக இருந்தது. நம் வாசிங்டன் தமிழ்ச்சங்கம் உள்ளூர் இசைக்குழுவான ‘இரசிகா’-வுக்கு வாய்ப்பளித்து அவர்களை ஊக்குவித்தது மிகவும் பாராட்டத்தக்கது.. சுருக்கமாகச் சொன்னால், இந்த சித்திரை விழா பல ஆண்டுகள் நினைவில் நிற்கும் ஒரு சிறந்த சித்திரை விழாவாக இருந்தது.

இந்த நிகழ்வை மிகச் சிறப்பாகவும் நன்றாக திட்டமிட்டு வெற்றிகரமாகவும் நடத்திய அனைத்து தன்னார்வலர்களுக்கும் நன்றி.






# வள்ளுவன் தமிழ் மையம் 16ஆம் ஆண்டுவிழா

**தொகுப்பு: திரு. தினேஷ்குமார் பழனிச்சாமி**



நாம் அனைவரும் வாழ்க்கையில் ஒரு முறையாவது இந்த வாழ்த்தினைப் பெற்றிருப்போம் அல்லது நம்மிடம் ஆசி பெறும் இளையவருக்கு இச்சொற்றொடரை சொல்லி வாழ்த்தியிருப்போம். சரி, இதற்கும் நம் பள்ளிக்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறீர்களா? ஆம். தொடர்பு இருக்கிறது. நம் வள்ளுவன் தமிழ் மையத்திற்கும் 16 என்ற எண்ணிற்கும் இந்த வருடம் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. நம் வள்ளுவன் தமிழ் மையம் தனது பதினாறாவது ஆண்டை பெருமையுடன் நிறைவு செய்கிறது. இதனைக் கொண்டாடும் வேளைதான், நமது வள்ளுவன் தமிழ் மையத்தின் பதினாறாவது ஆண்டுவிழா..!!

வள்ளுவன் தமிழ் மைய நிர்வாகக் குழு கடந்த ஜனவரி மாதம் ஒன்று கூடி இதற்கான ஆயத்தப் பணிகளை முடுக்கிவிட்டனர். அதன் அடிப்படையில் ஆண்டுவிழா ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்பட்டு, பதினாறாவது ஆண்டை பறைசாற்றும் நோக்கில் கல்வி, புகழ், வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்வாழ்க்கை, நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை,வாழ்நாள் என்ற பதினாறு வகை செல்வங்களை மையமாக வைத்து 16–ஆம் ஆண்டுவிழாக் களம் அமைக்கப்பட்டது.

ஆண்டுவிழா ஒருங்கிணைப்புக் குழுவின் கீழ் பல்வேறு சிறு குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவுக்கும் சில பொறுப்புகள் வழங்கப்பட்டன. மேடை அலங்காரக் குழு, புகைப்பட அரங்க அமைப்புக் குழு, தளவாடக் குழு, உணவு பரிமாறும் குழு, ஒலி-ஒளி அமைப்புக் குழு என்று பல்வேறு குழுக்களுடன் ஆண்டுவிழா நிர்வாகக் குழு ஒருங்கிணைந்து பயணித்தது. வாரநாட்களில் மாலை நேரத்திலும், வார இறுதி நாட்களின் பெரும்பாலான நேரங்களில் ஒன்று கூடித் திட்டமிடல், பொருள்கள் வாங்குதல் மற்றும் ஒன்றுசேர்த்தல் என்று பல்வேறு பணிகளுக்காக ஒவ்வொரு குழு உறுப்பினர்களும் அல்லும் பகலும் அயராது உழைத்தனர்.

ஒருபுறம் மேடை அலங்கரிக்கும் குழுவினர் கல்வி, வீரம், வாழ்நாள், நல்வாழ்க்கை, வெற்றி என்ற தலைப்பில் அருமையான பதாகைகள் வடிவமைத்திருந்தனர். இப்பதாகைகள் நம்முடைய தன்னார்வலர்களால் வடிவமைக்கப்பட்டு, நண்பர்களின் உதவியோடு தமிழ்நாட்டில் அச்சிடப்பட்டு நம் பள்ளிக்குக் கொண்டுவரப்பட்டது. நம்முடைய தன்னார்வலர்கள் வார இறுதியில் ஒருநாள் கூடி, இப்பதாகைகள் அனைத்தையும் மரச்சட்டங்களில் பொருத்தும் பணியை மிகச்சிறப்பாக செய்து முடித்தனர். அன்று தான் தெரிந்தது நம் தன்னார்வலர்கள் அனைவரும் பல்கலை வித்தகர்கள் என்று.

மறுபுறம் புகைப்பட அரங்க அமைப்புக் குழு




கன்னியாகுமரியில் வீற்றிருக்கும் ஐயன் வள்ளுவரை நம் கண்முன் கொண்டு வர மிகவும் சிரத்தை எடுத்து பணியாற்றிக் கொண்டிருந்தனர். தங்கள் சொந்த வேலைகளை புறம் தள்ளி, வரைதல், வெட்டுதல், ஒட்டுதல் என்று பல மணி நேரம் நம் பள்ளிக்காக உழைத்துக்கொண்டிருந்தனர். இம்முயற்சியில் நம்முடைய பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்களும் இணைந்து பணியாற்றினர் என்பது கூடுதல் சிறப்பு.

ஆண்டுவிழா என்றால் கலை நிகழ்ச்சிகள் இல்லாமலா? அதுவும் நம்முடைய மாணவச் செல்வங்கள் ஆடல், பாடல் என்று பட்டையை கிளப்பும் பட்டாசுகளாயிற்றே. அவர்களும் அதற்கான முன்பதிவு செய்துவிட்டு, நம்மை மகிழ்விக்க ஓயாது பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

விருந்தோம்பல் நம் பண்பாடு அல்லவா?. நிகழ்ச்சிக்கு வருபவர்களுக்கு உணவளிக்க வேண்டுமன்றோ?. அதுவும் அறுசுவை உணவு..!!. இதோ, நம் உணவு ஒருங்கிணைப்புக் குழு அதற்கான வேலைகளில் இறங்கிவிட்டது. வட விர்ஜினியாவில் உள்ள சிறந்த உணவகங்களுக்குச் சென்று அங்குள்ள சிறந்த உணவுகளைத் தேர்ந்தெடுத்து, நியாயமான விலையை நிர்ணயம் செய்து, மதிய உணவு, மாலை சிற்றுண்டி, இரவு விருந்து என்று நம் வயிற்றை மகிழ்விக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

சிறப்பு விருந்தினர்களை அழைக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது நம்முடைய ஆண்டுவிழா ஒருங்கிணைப்புக் குழு. அரசு நிர்வாகத்தில் உயர் பதவியில் இருப்பவர்கள், ஃபேர்ஃபாக்ஸ் கவுண்டி மற்றும் லௌடன் கவுண்டி பள்ளிகளின் தலைமை நிர்வாகிகள், தமிழ் சார்ந்து இயங்கக்கூடிய தகைசால் சான்றோர்கள், தமிழ்ச் சங்க நிர்வாகிகள் என்ற ஒரு நீண்ட பட்டியலை வைத்துக்கொண்டு, ஏராளமான மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள் என்று தொடர்ந்து பணியாற்றி அவர்கள் வருகையை உறுதி செய்தனர்.

ஜனவரி 2026-ல் தொடங்கிய இப்பயணம், பல்வேறு தன்னார்வலர்களின் பெரு முயற்சியோடு தன் இலக்கை அடையும் நாள் இதோ மிக மிக அருகில்..!.

மே-30, 2026 - வட விர்ஜினியா மாநிலத்தில் வியன்னா நகரில் அமைந்துள்ள ஓக்டன் உயர்நிலைப் பள்ளி காலை முதலே மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டது. மேடைப் பதாகைகள், அலங்காரப் பொருட்கள், ஒளி-ஒலிக் கருவிகள் மற்றும் தட்டுமுட்டு பொருட்களுடன் ஒரு கனரக வாகனம் வந்து நின்றது. வள்ளுவன் தமிழ் மைய தளவாடக்குழு தன்னார் வலர்கள் அவ்வாகனத்தை வரவேற்கக் காத்திருந்தது போல் அதற்கு முன்னரே வந்துவிட்டனர். வாகனம் வந்து சிறிது நேரத்திற்குள் "வாமா மின்னல்" என்பது போல் வாகனத்தில் இருந்த அனைத்து பொருட்களும் ஓக்டன் பள்ளியின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. நாம் ஏற்கனவே கூறிய பல்கலை வித்தகர்கள் சிறிது நேரத்திற்குள் காலியாக இருந்த மேடையை அருமையான பதாகைகளால் அலங்கரித்து விட்டனர்.

பள்ளியின் முகப்பில் நம் தன்னார்வலர்களும், முன்னாள் மாணவர்களும் அடங்கிய அலங்காரக் குழுவினர் செய்திருந்த தோரணமும், கோலமும், வரவேற்புப் பதாகையும் வருகின்ற விருந்தினர்களை, "வாங்க வாங்க" என்று மகிழ்வோடு வரவேற்றது. அவைகளோடு சேர்ந்து அங்கே ஒய்யாரமாக அமர்ந்தி ருந்த வள்ளுவரும் அனைவரையும் வரவேற்றார்.

புகைப்பட அரங்க அமைப்புக் குழுவினர் கன்னியாகுமரியில் வீற்றிருக்கும் ஐயன் வள்ளுவரை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது போல் அலங்கரித்திருந்தனர். இந்தியப் பெருங்கடலின் பின்னணியில் வான் புகழ் வள்ளுவன் வீற்றிருந்த கோலம் காண்போரை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

காலை சற்று பத்து மணிக்கெல்லாம் ஓக்டன் பள்ளி விழாக்கோலம் பூண்டுவிட்டது. பெரும்பாலான வள்ளுவன் தமிழ் மைய ஆண்கள் வேட்டி சட்டையிலும், பெண்கள் வண்ணமிகு சேலையிலும் வந்திருந்து தமிழ் மரபை பறைசாற்றினர். கண்கவர் ஆடைகளில் சிறார்கள் அங்கும் இங்கும் ஓடிக்கொண் டிருந்தனர். தங்கள் ஊர்த் திருவிழா மற்றும் தங்கள் இல்லத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு செல்வது போல்,




குடும்பம் சகிதமாக ஒரே வண்ண ஆடை அணிந்து வந்திருந்தது அழகுக்கு மேலும் அழகு சேர்த்தது.

வரவேற்பு மேசையில் அமர்ந்திருந்த தன்னார்வலர்கள், நிகழ்ச்சிக்கு வந்திருந்த மக்களை வரவேற்று, அவர்கள் முன்பதிவு செய்திருந்த உணவுச்சீட்டு மற்றும் நிகழ்ச்சி நிரல் போன்றவற்றை விநியோகித்துக் கொண்டிருந்தனர். அதேசமயம், நம் தன்னார்வலர்களின் மற்றொரு பிரிவினர், பதிவு மேசை அமைத்து, கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அணிகளை பரிசோதித்து உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தனர். அரங்கம் மெல்ல நிரம்ப தொடங்கியது.

சுமார் பதினோரு மணி பதினைந்து நிமிட மணியளவில் திரைகள் விலக்கப்பட, தமிழ்த்தாய் வாழ்த்தோடு ஆண்டுவிழா இனிதே தொடங்கியது. அதனைத் தொடர்ந்து அமெரிக்க தேசிய கீதமும், வள்ளுவன் தமிழ் மையப் பாடலும் பாடப்பட்டன. இப் பாடல்களை நம் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்கள் மிக அருமையாகப் பாடினார்கள். அதன்பின் ஆடல், பாடல், நாடகம் என்று கலை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக அரங்கேறின. ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு நிகழ்ச்சிகள் மிக அருமையாக இருந்தன. நிகழ்ச்சிகளுக்கு இடையே நம்முடைய மாணவர்கள் பதினாறு செல்வங்களைப் பற்றித் தொகுப்புரை வழங்கியது மிகவும் இரசிக்கும்படியாக இருந்தது.

நம் பள்ளி சிறப்புடன் செயல்பட மிகவும் உறுதுணையாக இருப்பது நம் ஆசிரியர்கள் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. அத்தகைய ஆசிரியப் பெருமக்களை பெருமைப்படுத்துவது நம் கடமை. எனவே ஆசிரியர்களை பெருமைப்படுத்தும் விதமாக, அனைத்து ஆசிரியப் பெருமக்களும் மேடைக்கு வரவழைக்கப்பட்டனர். வள்ளுவன் தமிழ் மைய நிர்வாகக் குழு சார்பாக, ஆசிரியப் பிரதிநிதி திருமதி பவானி இராமநாதன் அவர்கள் ஆசிரியர்களைப் பாராட்டிப் பேசியது சிறப்பாக இருந்தது. அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப் பட்டது.

உண்ட மயக்கம் தொண்டனுக்கும் இருக்காதா என்ன? மதிய உணவுக்குப் பின் மக்கள் ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்று விடாமல், அதிரடியாய் தொடங்கின கலை நிகழ்ச்சிகள்.

நம் பள்ளியில் இத்தனை ஆண்டு காலம் பயின்று, இறுதி ஆண்டை நிறைவு செய்யவிருக்கும் மாணவர்களுக்கு "பட்டமளிக்கும் விழா" முத்தாய்ப்பாக நடைபெற்றது. வடஅமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு. சுந்தர் குப்புசாமி அவர்களும் பிரபல மருத்துவர் திரு. இரவி ஐயர் அவர்களும், வாசிங்டன் தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் திரு. கொழந்தவேல் இராமசாமி அவர்களும் இணைந்து மாணவர்களுக்கு பட்டயமும், கோப்பையும் வழங்கி சிறப்பித்தார்கள். உடன் வள்ளுவன் தமிழ் மைய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் இருந்து மாணவர்களை பாராட்டி உற்சாகப்படுத்தினார்கள்.

ஆண்டுவிழாவின் மையக் கருவான பதினாறு செல்வங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, நம் பள்ளி மாணவர்கள் "பதினாறு செல்வங்கள் -அன்றும் இன்றும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தினார்கள். நிகழ்ச்சியில் உரையாற்றிய ஒவ்வொரு மாணவச் செல்வமும் தனக்கென ஒரு பாணியில் பேசியது காண்போரை மெய்சிலிர்க்கச் செய்தது. ஒவ்வொருவரும் தேர்ந்த பேச்சாளர் போல் பேசினார்கள் என்று சொல்ல வேண்டும். நம் பள்ளியில் நீண்ட காலமாக ஆசிரியையாக சேவை புரியும் திருமதி சர்மிளா வேல்முருகன் அவர்களின் ஒருங்கிணைப்பில் நடந்த இந்நிகழ்வு நம் ஆண்டுவிழா தலைப்பிற்கு மட்டுமல்ல, நம் பள்ளிக்கும், தமிழ் இனத்திற்குமே பெருமை சேர்த்தது என்று சொன்னால் மிகையாகாது.

வாசிங்டன் வட்டாரப் பகுதியில் சென்ற ஆண்டு குறள் கூடல் என்ற நிகழ்வு மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது. அந்நிகழ்வில் நம் பள்ளியைச் சார்ந்த ஏராளமான மாணவர்களும் பெற்றோர்களும் பங்கு பெற்றனர். அம்மாணவர்கள் அனைவருக்கும்

சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது. நமது பள்ளியின் ஆசிரியரும், வாசிங்டன் தமிழ்ச் சங்கத்தின் இணைச் செயலாளருமான திரு. பாலாஜி துரைசுவாமி இந்நிகழ்வை ஒருங்கிணைத்து மாணவர்களை உற்சாகப்படுத்தினார்.

இதுவரை நம் பள்ளியில் தமிழ் பயின்று, ஃபேர்ஃபாக்ஸ், லௌடன் மற்றும் பிரின்ஸ் வில்லியம்ஸ் கவுண்டிகளைச் சார்ந்த பள்ளிகள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான உலக மொழித் தேர்வில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களை பெருமைப்படுத்தும் நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது. அம்மாணவர்கள் அனைவரும் மேடைக்கு வரவழைக்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டனர்.

வள்ளுவன் தமிழ் மையத்தின் பதினாறாவது ஆண்டுவிழாவிற்குப் பல்வேறு தளத்தில் பணியாற்றும் சிறப்பு விருந்தினர்கள் வந்திருந்தனர். குறிப்பாக விர்ஜினியா அரசின் இயற்கை வளத்துறை செயலாளர் திரு. டேவிட் புலோவா, விர்ஜினியாவின் 11-வது மாவட்ட பிரதிநிதி திருமதி கிரெட்சன் புலோவா, விர்ஜினியா மாநில மேலவை உறுப்பினர் திரு. கண்ணன் ஸ்ரீனிவாசன், ஃபேர்ஃபாக்ஸ் கவுண்டி பள்ளிகளின் தலைமை நிர்வாகி மருத்துவர் மிச்செல் சி. ரீட் , லௌடன் கவுண்டி பள்ளிகளின் தலைமை நிர்வாகி திருமதி ஏப்ரல் சாண்ட்லெர், ஃபேர்ஃபாக்ஸ் கவுண்டி பள்ளிகளின் மேற்பார்வையாளர் திருமதி கேத்தி ஸ்மித், ஃபேர்ஃபாக்ஸ் கவுண்டி பள்ளிகளின் நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி சீமா தீட்சித், வடஅமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு. சுந்தர் குப்புசாமி, வடஅமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு. நாஞ்சில் பீற்றர், ஹார்வர்ட் தமிழ் இருக்கைக்கு பெரும் பங்காற்றிய மருத்துவர் திரு. ஜானகிராமன், மருத்துவர் திரு. இரவி ஐயர், நமது பள்ளியின் பல்வேறு முன்னெடுப்புகளுக்கு உறுதுணையாக இருந்த திரு. இராம் வெங்கடாச்சலம் போன்றோர் கலந்து கொண்டது மிகச் சிறப்பு. வந்திருந்த அனைத்து சிறப்பு விருந்தினர்களும் நம்முடைய பள்ளியின் சார்பில் பெருமைப்படுத்தப் பட்டனர். ஒவ்வொருவரும் தங்கள் உரையில் நம் பள்ளி குறித்தும், தமிழ் மொழி குறித்தும் பெருமையாகப் பேசியதில் இருந்து நம் பள்ளி மீது அவர்களுக்கு இருக்கும் மதிப்பு நன்றாக விளங்கியது. இது நம் அனைவருக்கும் கிடைத்த மாபெரும் அங்கீகாரம். நமது குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளில் அவர்கள் கண்கள் நிறைந்தது என்றால் நம்முடைய விருந்தோம்பலில் அவர்கள் நெஞ்சம் நிறைந்தது என்று சொன்னால் மிகையல்ல.

நம் பள்ளி சிறப்பாக இயங்குவதற்குப் பல்வேறு குழுவினர் வாரந்தோறும் வருடம் முழுவதும் பணியாற்றுகிறார்கள். அவர்கள் அனைவரையும் பெருமைப்படுத்துவது நம் கடமை அல்லவா?. ஒவ்வொரு குழுவில் உள்ள தன்னார்வலர்கள் அனைவரும் நிர்வாகக் குழு சார்பாக அறிமுகப்படுத்தப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டனர். பெற்றோர்க் குழுவினரைப் பெற்றோர் பிரதிநிதி திரு. சுரேஷ் பால்சாமி அவர்களும், நிதி மற்றும் தணிக்கைக் குழுவினரைப் பொருளாளர் திரு. சத்குரு தண்டபாணி அவர்களும், தளவாடக் குழுவினரை செயலாளர் திரு. அருண் இராமசாமி அவர்களும், கலாச்சார மற்றும் தேர்தல் குழுவினரை இணைச் செயலாளர் திரு. தினேஷ் பழனிச்சாமி அவர்களும், தொழில்நுட்பக் குழுவினரைத் துணைத்தலைவர் திரு. சண்முகா பாஸ்கரன் அவர்களும் பாராட்டி சிறப்புரையாற்றினார்கள். பள்ளியின் தலைவர் திரு. வாஞ்சிநாதன் சஞ்சீவி அவர்கள் அனைவரையும் வரவேற்று, வாழ்த்தி, பாராட்டி உரையாற்றினார்.

மேலும் நம் பள்ளி மீது பேரன்பு கொண்டு, இந்நிகழ்ச்சிக்கு நிதியுதவி செய்த தொழிலதிபர்கள், தொழில்முனைவோர்கள், தன்னலமற்ற தமிழ் ஆர்வலர்கள் போன்றோரையும் வள்ளுவன் தமிழ் மைய நிர்வாகக் குழு மேடைக்கு அழைத்து பெருமைப்படுத்தியது.

என்னதான் மாலை நேரத்தில் சிற்றுண்டி உண்டாலும், விருந்து என்றால் நாம் சும்மா விடுவோமா என்ன?. சுமார் ஏழேகால் மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவடைந்த பின் அனைவருக்கும் அறுசுவை விருந்து பரிமாறப்பட்டது. மனமும், வயிறும் நிறைந்து அனைவரும் தத்தம் வீடுகளுக்குப் புறப்படத் தயாரானார்கள். அதே சமயம் நம் பல்கலை வித்தகர்களான தன்னார்வலர்கள் காலை அரங்கேற்றிய அனைத்தையும் அக்குவேரு ஆணிவேராகப் பிரித்தெடுத்து அடுக்கிக்கொண்டிருந்தனர். காலையில் இருந்த உற்சாகம் சற்றும் குறையாமல் அனைவரும் பள்ளியைச் சுத்தம் செய்து இரவு 10 மணியளவில் ஓக்டன் பள்ளி வாசலைக் கடக்கும் பொழுது, காலையில் தட்டுமுட்டு பொருட்களுடன் வந்த அக்கனரக வாகனம் மீண்டும் பொருட்களை ஏற்றிக்கொண்டு பள்ளியை விட்டு மெதுவாக நகரத் தொடங்கியது. எங்கள் அனைவரது மனமும் அதனோடு சேர்ந்து நகர்ந்தது..! ஏதோ ஒன்றை சாதித்த பெருமையுடன்..!!

தமிழால் இணைந்தோம்.! தமிழுக்காக இணைந்து பயணிப்போம்..!! வாழ்க தமிழ்..!!!

# நினைவுகள்

கண்ணீர் வடித்தோம், மௌனமாக நின்றாய்,
எங்களை விட்டு, வெகு தூரம் சென்றாய்.
இரக்கமற்ற கடவுள், கல்லாகிப் போனது,
கல்லுக்குள் ஈரம், நீ விட்டுச் சென்றது.

நான் புலம்பினேன், நீ தோள் தந்தாய்,
தோளோடு தோளாய், நீ என்றும் நின்றாய்.
விதியின் சதி, நாம் விலகி நின்றது,
விலகும் வலி, இன்று நான் கண்டது.

பாடல்கள் பல, பயணங்கள் பல,
நிகழ்வுகள் பல, விருந்துகள் பல.
விடிய விடிய அரட்டை அடித்த இரவுகள் பல,
இன்று, நீ விட்டுச் சென்ற, நினைவுகளும் பல.

ஜோதியில் இன்று, நீ கலந்துவிட்டாய்,
நட்புக்கு இலக்கணமாய், பாடம் சொல்லிவிட்டாய்.
பொழுதும் விடிந்தது, கண்ணீரும் காய்ந்தது,
உன் மலர்ந்த முகமோ மனதோடு நின்றது.

திரு. கிஷோர் சிங்

# வருந்துகிறோம்!

ஆழ்ந்த வருத்தத்துடன், நமது வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கத்தின் அன்பிற்குரிய உறுப்பினரும் சிறந்த தன்னார்வலருமான திரு. சத்குரு தண்டபாணி (50) அவர்கள் காலமானார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரை இழந்து வாடும் அவர் குடும்ப உறுப்பினர்கள், அவரின் துணைவியார் திருமதி ராஜாம்பாள் , மற்றும் அவர்களின் மகள்கள், நண்பர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில், வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.









# சங்க இலக்கியச் சொற்பொழிவுகள்

அன்பான வணக்கம்!

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அடங்கிய சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷங்களாகும். தேன் சொட்டும் இலக்கியச் சுவை மிகுந்த இக்கடலின் தனித்துவத்தை உலகறியச் செய்ய, நம் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் இணைய வழியில் 'சங்க இலக்கியச் சொற்பொழிவுகள்' என்ற தலைப்பில் தொடர் நிகழ்வுகளை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது.இத்தொடரில் பல தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் பங்கேற்றுத் தங்களின் கருத்துப் பெட்டகத்தைப் பகிர்ந்து வருகின்றனர்.

அந்த வகையில்:கடந்த மார்ச் 22, 2026, ஞாயிற்றுக்கிழமை (நேரம் பிற்பகல் 3.00 மணி) பேராசிரியர் முனைவர் வாசு அரங்கநாதன் 'பரிபாடல் - ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் சிறப்புரையை வழங்கினார். பண்கள் வகுக்கப்பட்டு, இசையுடன் பாடக்கூடிய சிறப்பைப் பெற்ற நூலாகப் 'பரிபாடல்' திகழ்கிறது. இதன் மூலம் பரிபாடலானது தமிழ் மொழியின் இசை, பக்தி மற்றும் இலக்கண வளத்தை ஒருசேரக் காட்டும் பேழையாகத் திகழ்கிறது. அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 26, 2026 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு 'புறநானூறு - ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் பேராசிரியர், தலைவர் இர. பிரபாகரன் (மேனாள் தலைவர், வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம்) சிறப்புரை வழங்கினார். பண்டைய தமிழர்களின் வீரம், கொடை, அரசியல் மற்றும் சமுதாய விழுமியங்களை எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணம் புறநானூறு ஆகும்.



திருமதி புவனேஸ்வரி இராஜேஷ்குமார்

இது போன்று தமிழ் இலக்கியத்தின் சிறப்பினை நாம் அறிந்து கொள்ளத் தமிழ்ச் சங்கம் நமக்கு ஏற்படுத்திய ஓர் அரிய வாய்ப்பு தான் 'இணைய வழி சங்க இலக்கியச் சொற்பொழிவுகள்'. அவர்களுடைய முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது.

எனவே, இந்த வாய்ப்பைப் பயன் படுத்தி நம் அடுத்த தலைமுறையினருக்குத் தமிழின் இனிமையையும் பெருமையையும் அறியச் செய்வோம்.

நன்றி!வணக்கம்!

# வாழ்த்துரை



## தென்றல் முல்லை - இளம் எழுத்தாளர்களின் கலந்துரையாடல்

**திருமதி சுசீலா பழனிசுவாமி**

அன்று விடுமுறை என்றபோதும் தமிழின்பாலுள்ள ஆர்வத்தினால்
அயராது எழுந்து பாலா குப்புசுவாமி அவர்கள்
அதிகாலையே காணொளி துவக்கியதில் ஒலித்தது
அபிநயா அவர்களின் அபிநயத்தமிழ்

ஆலயமணியின் ஓசையாக தாத்தா பாட்டி இரசிக்க
ஆறுவித்தியாச சவாலை உருவாக்கிய சாய் ஜனனியையும்
ஆராவமுதமாய் வார்த்தை விளயாட்டை மழலை மொழியில்
ஆர்பரித்த ருத்ரேசையும் கயலையும் வென்றது ஆகமத்தமிழ்

இனிய கலைப் பொழுதில் இன்னிசையென
இளம் எழுத்தாளர்கள் பேசியதில் வரலாற்றுப் பாதையிலோர் பயணம்
இனிவருவோர்க்கு வாழ்க்கையின் அடித்தளமென அடித்துரைத்தது
இனயாவின் வடுவற்ற இயற்றமிழ்

ஈன்ற பொழுதினும் தாய்தந்தையரை பெரிதுவக்கச் செய்தது
இன்சா அவரின் அப்பாவென்ற அப்பாவைவென்ற கவிதை சாரம்
ஈரம் நிறைந்தவர்தாம் தந்தை இடித்துரைத்தாலும்
ஈசனானார் இவ்வையகத்தில் உணர்வித்தது ஈகைத்தமிழ்

உவகையோடு கீர்த்தனாவின் கீர்த்தனமாய்
உரக்க ஒலித்தது முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து
உரமும் திடமும் கலந்த தமிழ்ப்பற்று
உணர்வோடு இசைத்து அறிவுடைநம்பி அவர்களின் உன்னதத்தமிழ்

ஊனோடு கலந்த உயிர் மூச்சான தமிழ் மொழி
ஊர்தியாக நாளைய தலைமுறையைச் சுமந்து கொண்டு
ஊடகம் வாயிலாக இன்று நம்மை ஒருங்கிணைத்து
ஊழ்வினைப் பலனாகத் தெளிந்தது நம்மிடை ஊறுதமிழ்

எதிர்காலம் இணையம் வாயிலாக இத்தலைமுறையை
எதிர்கொள்ளும் நிலையை விவரித்த கனிஸ்கர்
எள்ளளவும் குறைவில்லை இவர்களின் சாதனை
என்று பெருமித்த சூர்யாவையும் இணைத்தது எங்கள்தமிழ்

ஏணிப்படி புத்தகம் படி இவற்றிடை அனிஷ்
ஏனிப்படி பொருள்மாற்றம் என்ற கேள்வியை எழுப்புகையில்
ஏமாறவேண்டாம் இது ஒரு சொல் இருபொருள் என்று
ஏட்டிலே சிறந்த தொல்காப்பியத்தைச் சான்றிட்டது ஏறுதமிழ்

ஐயமின்றி கதையையும் திருக்குறளையும் இணைத்து
ஐந்திலேயே வளைந்து கதை கவிதை விடுகதையென இயம்பினர்




ஐவர் ஆதனா, இலக்கியா, கவின், காவ்யா, இலட்சிதா
ஐம்புலன்களையும் துயிலெழுப்பியது அயராததமிழ்

ஒவியம் புத்தகம் தீட்டி மெருகூட்டிய கீர்த்தனா ஹாசினி, ரக்சன்
ஒன்றுகூடி மகிழ்ச்சியை, பொங்கலை பெருமித்த மிருதுளா மான்சி
ஒயிலாட்டமாய் பேசியவர்களுக்கு அழகுகூட்டிய இரகிமா அவர்களும்
ஒருங்கிணைந்து கலந்துரையாடியது இதுவரை ஒன்பது தமிழ்

ஓராயிரம் மொழி இருப்பினும் இளையதலைமுறை பேசியது, தமிழின்
ஓங்காரம். செல்லையா அவர்கள் கவிதா அவர்கள் சிறப்பு கௌரவித்தது
ஓடும் அலைகள் உயர்வது இடியின் முழக்கத்தினால். உச்சரிப்பு
ஓசை தமிழினவோ். இராமசுவாமி அவர்கள் இடித்துரைத்தது - ஓயாதமிழ்

ஔடதம் எதுவாயினும் சீராக செப்புவது மங்காத ஒருயிர்தமிழ்
ஔவை தமிழ் பொங்கு தமிழ் என்றென்றும் வாழ்க தமிழ்!

# பசுமரத்தாணியாய் நம் ஊரின் நினைவுகள்....

திருமதி சத்யா பாபு

கதிரவனின் வருகையைக் கணித்த,
கொக்கரக்கோவென்ற சேவலின் சத்தம்..
செவிவழியே  பாய்ந்த, கோவிலின் மெல்லிசை மனதின் ராகம்..
நுகரக் கண்டேன், பலவண்ணப் பூவின்  வாசம் ..
வியர்த்தபின் கிடைத்த, மிதமான காற்று வசந்தம் ..

வரையறையில்லா, சுதந்திரப்போக்கு வானவில் வண்ணம் ..
மன உலட்டல் தீர, தேடிச் சென்ற தாய்மடி சொர்க்கம் ..
அதட்டலுடன் கூடிய, தந்தை அரவணைப்பு திவ்வியம் ..
உறவுகளின் பரிசம், சில்லென்ற ஆனந்தம் ..
குழந்தைகளுக்குக்  கிடைக்கும், பல கொஞ்சல்கள் பேரானந்தம் ..

பாட்டி ஊட்டிய உணவு, நாம் தேடச் சென்ற திரவியம் ..
தாத்தா சீவிய நுங்கும் இளநீரும், உயிர்தொடும் நேசம் ..
அடிக்கடி அணையும் மின்சாரத்தால், வீதிதான் உறைவிடம் ..
ஆலவிழுதில் தூளியாடியது என்றும் பரவசம் ..

வெயிலும் மறந்த, பசியும் மறந்த வீதிவிளையாட்டு சுகவாசம் ..

மழையொழுகும் கூரைக்குள், பலபாத்திர இசையில் உறக்கம் ..
தட்டாங்கல்லும், கோலிக்குண்டும் நினைவில் ஓவியம் ..
அம்மா சூட்டிய, கனகாம்பரம் மனதில் பத்திரம் ..
தேர்த்திருவிழாவில் அரும்பேறும் பலகாதல் காவியம்..

ஒருநாள் பண்டிகைக்காக,
ஒரு திங்களாகவே பண்டிகை வெளிச்சம் ..
மண்வாசனை அரணில் மனம் சாந்தம் ..
பூக்கள் கூட பருவத்தில்தான் மலரும் ..
நம் ஊரின் நினைவுகள், நினைத்தாலே மலரும் ..

உணர்வுகள் ஏங்கும் பொழுது,
பசுமரத்தாணியாய் ..
உணர்வுக்கு விருந்தாய் ..
தீராக் காதலாய் ..
அனிச்சை செயலாய் ..
அதிசயமாய் .. நம் ஊரின் நினைவுகள் ..







# பெண்மை... பெருமை....




சுகிர்தராணி நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கியமான பெண் கவிஞர்களில் ஒருவராகத் திகழ்கிறார். பெண்களின் வாழ்க்கை, சமூக ஒடுக்குமுறை, சாதி அடக்குமுறை, உடல் அரசியல் மற்றும் விடுதலை போன்ற கருப்பொருள்களைத் தனது கவிதைகளில் வலிமையாக வெளிப்படுத்தியவர். அவர் ஒரு கவிஞராக மட்டுமல்லாமல் ஆசிரியர், பெண்ணிய சிந்தனையாளர் மற்றும் சமூக செயற்பாட்டாளராகவும் அறியப்படுகிறார்.

கவிஞர் சுகிர்தராணி, இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை நகரத்திற்கு அருகில் உள்ள இலாலாப்பேட்டை என்னும் கிராமத்தில் 1973 ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் தாயார் தவமணி, தந்தை சண்முகம் என்பவர்களாவர். கவிஞர் சுகிர்தராணி, இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கத்தில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரித் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். பொருளாதாரம் மற்றும் தமிழ் இலக்கியம் ஆகிய பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.

அவருடைய கவிதைகள் பெண் அனுபவங்களை நேர்மையாகவும் துணிச்சலாகவும் பதிவு செய்கின்றன. குறிப்பாக சிறுபான்மை பெண்களின் வாழ்க்கை, அவர்களின் வலி, போராட்டம் மற்றும் எதிர்ப்புக் குரல் ஆகியவை அவரது படைப்புகளில் முக்கிய இடம் பெறுகின்றன. சமூகத்தில் நிலவும் அநீதிகளை எதிர்த்து மனித சமத்துவத்தை வலியுறுத்தும் தனித்துவமான குரலாக அவர் திகழ்கிறார்.

சுகிர்தராணியின் முக்கிய படைப்புகளில் கைபற்றி என் கனவு கேள், இரவு மிருகம், காமத்திப்பூ, தீண்டப்படாத முத்தம், அவளை மொழிபெயர்த்தல், இப்படிக்கு ஏவாள், நீர் வளர் ஆம்பல், சுகிர்தராணி கவிதைகள் (1996 - 2016)ஆகிய படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. அவரது படைப்புகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

அவரது இலக்கியப் பங்களிப்புக்காகப் பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. பெண்களின் உரிமைகள் மற்றும் சமூக நீதி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் அவரது படைப்புகள் தமிழ் இலக்கியத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. சுகிர்தராணி தனது கவிதைகள் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், பெண்களின் விடுதலையின் அடையாளமாகவும் விளங்குகிறார். அவரது படைப்புகள் தமிழ் இலக்கியத்திற்கு புதிய சிந்தனைகளையும் சமூக விழிப்புணர்வையும் வழங்குகின்றன. எனவே, நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கியமான பெண் கவிஞர்களில் ஒருவராக சுகிர்தராணி போற்றப்படுகிறார்.

அவரது சிறந்த கவிதைப் பங்களிப்பிற்காக தேவமகள் கவித்தூவி விருது வழங்கப்பட்டது. நவீன தமிழ் இலக்கியத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டி புதுமைப்பித்தன் நினைவு விருது வழங்கப்பட்டது. இலக்கியம் மற்றும் சமூகப் பணிக்கான அவரது சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் பெண்கள் முன்னணி சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டிற்கான விளக்கு விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

சுகிர்தராணியின் கவிதைகள் சிறுபான்மை இன மக்களின் வாழ்க்கை, பெண்களின் உரிமைகள், சமூக நீதி ஆகியவற்றை வலியுறுத்துவதால், அவர் தமிழ் இலக்கியத்தில் முக்கியமான பெண்ணிய மற்றும் சிறுபான்மை இன மக்களின் கவிஞராகப் போற்றப்படுகிறார்.



திருமதி ரஹீமா
அலாவுதீன்

# உலகத் தமிழிசைப் பல்கலைக்கழகம்

## World Tamil Music University

(தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

IDS
Innovative Dynamic Solutions Global Inc.

ISOME

உலகத் தமிழிசை மேம்பாட்டு மையம்
WORLD TAMIL MUSIC DEVELOPMENT CENTER





**BABU VINAYAGAM**
PRESIDENT

Office:
13800 Coppermine Rd,
Herndon, VA - 20171
www.idsglobalinc.com

Email:
babu@idsglobalinc.com
Work: 703-880-6749
Mobile: 703-939-5465

படைப்பும் படைப்பாளியும்

# கி. இராஜநாராயணன் "மாயமான்" சிறுகதை அறிமுகம்



தமிழ் இலக்கிய உலகின் முன்னோடியாகவும், 'கரிசல் இலக்கியத்தின் தந்தை' என்றும் போற்றப்படும் கி. இராஜநாராயணன் (கி. இரா) அவர்கள், மண்ணின் மணத்தையும் மக்களின் குரலையும் தன் எழுத்துகளால் அழியா வரம் பெறச் செய்தவர். தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகேயுள்ள இடைசெவல் என்ற எளிய சிற்றூரில் பிறந்த இவர், அடிப்படையில் ஒரு தீவிரமான விவசாயி. நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்த அவரது வாழ்வே, பிற்காலத்தில் தமிழ் இலக்கியப் பரப்பில் அவர் நிகழ்த்திய பிரம்மாண்டமான எழுத்துப் புரட்சிக்கு ஆணிவேராக அமைந்தது.

வழக்கமான எழுத்தாளர்களைப் போலன்றி, தனது முப்பத்தைந்து வயதிற்குப் பிறகே கி. இரா. எழுத ஆரம்பித்தார். ஆரம்பகாலத்தில் தமிழ் இலக்கிய வெளியை ஆக்கிரமித்திருந்த மேட்டிமைத்தனமான, இலக்கணச் சுவடு மாறாத மொழியமைப்பைத் தன் எழுத்துகளால் உடைத்தெறிந்த கலகக்காரர் இவர். மக்களின் எதார்த்தமான பேச்சுமொழியையும் வட்டார வழக்கையும் இலக்கியத்தின் உச்சத்திற்கு உயர்த்திப் பிடித்த பெருமை இவருக்கு உண்டு. இவருடைய முதல் சிறுகதையான "மாயமான்" புகழ்பெற்ற 'சரஸ்வதி' இதழில் வெளியாகி, தமிழ் வாசகப் பரப்பில் இவருக்கான உன்னதமான இடத்தை நோக்கிப் பயணிக்க அடித்தளமிட்டது.

இயல்பிலேயே ஒரு தேர்ந்த கதைசொல்லியான கி. இரா, "நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன்; பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்" என்று தன்னைப்பற்றி மிகவும் நகைச்சுவையோடும் எதார்த்தத்தோடும் கூறிக் கொள்பவர். பள்ளிப் படிப்பைத் தாண்டாத ஒரு எளிய விவசாயி, தன் அசாத்தியமான கிராமியக் கதைசொல்லும் மரபினால் ஒட்டுமொத்த தமிழ் நாடோடிக் கதைகளையும், கரிசல் நாட்டு மக்களின் வாழ்வியலையும் ஆவணப்படுத்தி தமிழ் இலக்கிய வரலாற்றையே மாற்றி எழுதினார் என்பதுதான் இவரது ஆகச்சிறந்த சாதனையாகும்.

கி. இராஜநாராயணனின் முதல் சிறுகதையான "மாயமான்" (1958-இல் 'சரஸ்வதி' இதழில் வெளியானது), சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியக் கிராமப்புற எதார்த்தத்தையும், அரசாங்கத் திட்டங்கள் எளிய மக்களை எங்ஙனம் அலைக்கழிக்கின்றன என்பதையும் துல்லியமாகத் தோலுரித்துக் காட்டும் ஒரு உன்னதப் படைப்பாகும். ஊழலற்ற அரசாங்கம் அந்நாளில் இருந்தது என்ற எண்ணம் உள்ளோருக்கு மாயையை விலக்கி எளிய அரசியல் உண்மையை இக்கதை பதிவு செய்கிறது.

கதை தூத்துக்குடி மாவட்டத்தின் ஒரு எளிய கரிசல் கிராமத்தில் துவங்குகிறது. அவ்வூரின் மளிகைக் கடைக்காரரும், நாலரை ஏக்கர் மந்தை நிலத்திற்குச் சொந்தக்காரருமான அப்பாவு செட்டியார் ஒரு மாலை வேளையில் கோவில்பட்டியிலிருந்து சைக்கிளில் ஊருக்குள் வருகிறார். அவரைச் சுற்றி



**திரு. கமலபாரதி பச்சியப்பன்**

கிராமத்து இளைஞர்கள் கூடி, அவரது சைக்கிள் ஹேண்ட்பாரில் இருக்கும் தினப்பத்திரிகையை (நியூஸ்பேப்பர்) வாங்கி உலக விஷயங்களைப் படிக்கத் தொடங்குகிறார்கள். அன்றைய தினம் இந்தியாவின் சுதந்திர தினம்.

பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த ஒரு இளைஞன் உரத்த குரலில் ஒரு முக்கியச் செய்தியை வாசிக்கிறான்: "புஞ்சைப் பகுதி விவசாயிகளுக்குச் அரசாங்கம் கிணறு தோண்ட ஒரு கிணற்றுக்கு 400 ரூபாய் இலவசமாக வழங்குகிறது. விவசாயிகள் இந்த மானியத்தைப் பயன்படுத்தித் தங்கள் நிலங்களைத் தோட்டங்களாக்கி இலாபமடைய வேண்டும்."

இந்தச் செய்தியைக் கேட்டதும் அங்கிருந்த கிராமத்து விவசாயிகளுக்கு அதை முழுமையாக நம்ப முடியவில்லை. "அரசாங்கம் ஏன் நமக்கு சும்மா பணம் தர வேண்டும்? எல்லாம் பேப்பர்காரன் விட்ட பொய்" என்று அவர்கள் கலைந்து போகிறார்கள்.

ஆனால், ஊரில் ஓரளவு வசதியுள்ளவரான அப்பாவு செட்டியாரால் அந்தச் செய்தியை மறக்க முடியவில்லை.தன் நாலரை ஏக்கர் புஞ்சை நிலத்தில் சர்க்கார் தரும் 400 ரூபாயை வாங்கி ஒரு கிணற்றை வெட்டிவிட்டால், வானம்பார்த்த பூமியாக இருக்கும் நிலம் நஞ்சை பூமியாக மாறிவிடும்; பிற்காலத்தில் பிள்ளைகளுக்கும் வசதியாக இருக்கும் என்று எண்ணுகிறார். அரசாங்கம் காட்டும் அந்த 400 ரூபாய் மானியம், செட்டியாரின் கண்களுக்கு ஒரு 'மாயமானாகத்' தெரியத் தொடங்குகிறது. அவரது வயதான தந்தை நல்லசிவம் செட்டியார், "அரசாங்க காசு நமக்கெதற்கு? வம்பு வரும்" என்று எச்சரித்ததையும் மீறி, அப்பாவு செட்டியார் கிணறு வெட்டும் முயற்சியில் இறங்குகிறார்.

அரசாங்கப் பணத்தைப் பெறுவது அத்தனை சுலபமாக இல்லை. தாசில்தார், குமாஸ்தா, கிராம அதிகாரி என ஒவ்வொரு மட்டத்திலும் இலஞ்சம், கைகூலி, மற்றும் அதிகாரிகளின் மேட்டிமைத்தனம் செட்டியாரை வாட்டுகிறது. சர்க்கார் கொடுப்பதாகச் சொன்ன 400 ரூபாய் கைக்கு வருவதற்குள், செட்டியார் தன் கையில் இருந்த சொந்தப் பணத்தில் 100 ருபாய் அதிகாரிகளுக்கு உபசாரங்கள் செய்யவும், இலஞ்சமாகக் கொடுக்கவும் செலவிடுகிறார். ஒருவழியாகக் கிணறு வேலை தொடங்குகிறது. ஆட்களுக்குக் கூலி, வெடிமருந்துச் செலவு எனத் திட்டமிட்ட 400 ரூபாயைத் தாண்டிச் செலவு எகிறுகிறது. கிணற்றில் தண்ணீர் கசிந்ததே தவிர, எதிர்பார்த்த அளவு பெரும் ஊற்று வரவில்லை. அதற்குள் இலவசப் பணம் முடிந்து போகிறது.

மேலும் 500 ரூபாய் தேவைப்பட்டதால் அய்யாவர் நாயக்கரிடம் கடன் கேட்கச் செல்கிறார் அப்பாவு செட்டியார். நெற்றிக்கு நாமம் குழைத்துக் கொண்டே செட்டியாரை மிகவும் அன்யோனியமாக "மருமகப்பிள்ளை" என்று வரவேற்கும் நாயக்கர், அவர் கடன் கேட்டுத்தான் வந்திருக்கிறார் என்பதை முன்பே வியூகித்து விடுகிறார். செட்டியார் தயங்கித் தயங்கித் தன் கிணற்றுத் தேவைக்காகக் கடன் கேட்கும் போது, நாயக்கர் சற்றும் யோசிக்காமல், "உனக்கில்லாத ரூபாயா, தாராளமாய் வாங்கிக் கொண்டு போ" என்று அள்ளி வீசுகிறார். பணம் கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சியில் செட்டியாரின் உச்சி குளிர்கிறது. ஆனால், அங்கேதான் கதையின் ஆகச்சிறந்த முரண்நகை நிகழ்கிறது: செட்டியார் தனக்குக் கடன் ரூபாய் கிடைத்துவிட்டதாக எண்ணி மகிழ, நாயக்கரோ




செட்டியாரின் நாலரை ஏக்கர் நிலமே தன் கைக்கு வரப்போகிறது என்ற பேராசைக் கணக்கோடு அந்தப் பணத்தைத் தருகிறார். இந்த முதலாவது கடன் ஒரு மிகப்பெரிய முரண்நகை (*Irony*). அரசாங்கம் தரும் "இலவச" நலத்திட்டத்தைப் பெறுவதற்கே, ஒரு ஏழைக் குடிமகன் கிராமத்து நிலப்பிரபுவிடம் போய் வட்டிக்குக் கடன் வாங்க வேண்டியிருக்கிறது.

அரசாங்க மானியத்தை நம்பிக் களமிறங்கிய செட்டியார், இறுதியில் 600 ரூபாய் கொடுத்து மாடுகளையும், இதர கமலைச் சாமான்களையும் கடனில் வாங்குகிறார். கிணறு வெட்டியாயிற்று, மாடுகளும் வந்தாயிற்று. ஆனால், நிலத்தில் விவசாயம் செய்து அந்தப் பணத்தை மீட்பதற்குள் கடன்காரர்களின் நெருக்குதலும், அரசாங்கத் தவணையைத் திருப்பிச் செலுத்தக் கோரும் நோட்டீஸ்களும் செட்டியாரைத் தேடி வருகின்றன. கிணற்றுத் தோட்டத்திலிருந்து வந்த சொற்ப வருமானம், வாங்கிய கடனின் வட்டிக்குக் கூடக் காணவில்லை. கடைசியில், இலாபம் தரும் என்று நினைத்த கிணறு, செட்டியாரின் குடும்பத்தையே கடனாளியாக்கி ஊரைவிட்டே வெளியேற்றுகிறது.

செட்டியார் இரண்டாவது முறை அய்யாவர் நாயக்கரிடம் போகும்போது, அவரிடம் முதல்முறை இருந்த ஆசையோ நம்பிக்கையோ இல்லை; மாறாக, தன் மானத்தையும் குடும்ப கௌரவத்தையும் எப்படிக் காப்பாற்றுவது என்ற அடியோடு உறைந்த நெருக்கடி நிலையில் போகிறார்.

மாரீசனின் மாயமானைத் துரத்திச் சென்று சீதை தன் வாழ்வை இழந்தது போல, அரசாங்கத்தின் இனாமாக வந்த 'மாயமானான' 400 ரூபாயைத் துரத்திச் சென்று, அப்பாவு செட்டியார் தன் சொந்தப் புஞ்சை நிலத்தையும், உழைப்பையும், நிம்மதியையும் இழந்து நிற்பதோடு இச்சிறுகதை முடிகிறது.

நண்பர்களே இந்தக் கதை எழுதப்பட்ட 1958 ஆண்டு திரு.காமராசர் ஆட்சிக் காலம். அதிகாரிகள் அளவில் இலஞ்சம் இருந்திருப்பதை இந்தச் சிறுகதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அரசியல் பொற்காலம் எனும் மாயையை எண்ணி மாற்றம் எனும் இரசிகத் தன்மையில் இருந்து விடுபட, அறிவார்ந்த அரசியல் கேள்விகளை இந்தக் கதை எழுப்பும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கதையின் சுட்டி இங்கே:

*https://www.sirukathaigal.com/%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D%E2%80%8C/*





# பாரதியார் தமிழ்ப்பள்ளி ஆண்டு விழா – கலை, கல்வி, பண்பாடு இணைந்த பெருவிழா

**தொகுப்பு: திருமதி புவனேஸ்வரி சதீஷ் குமார்**

தமிழ் என்பது ஒரு மொழி மட்டுமல்ல. அது ஒரு சுவாசம். ஒரு அடையாளம். ஒரு தலைமுறையின் தொடர்ச்சி. அந்தத் தொடர்ச்சியை நேரில் உணரச் செய்த ஒரு நாள் தான் பாரதியார் தமிழ்ப்பள்ளியின் ஆண்டு விழா. அது ஒரு நிகழ்ச்சியாகத் தொடங்க வில்லை. அது ஒரு உணர்வாக, ஒரு பெருமையாக, ஒரு பண்பாட்டு விழிப்புணர்வாக ஆரம்பமானது. விழா நடைபெறும் அரங்கம் நிரம்பியிருந்தது கூட்டத்தால் மட்டும் அல்ல, தமிழ் மீது கொண்ட பாசத்தால்.குழந்தைகளின் உற்சாகம், பெற்றோரின் எதிர்பார்ப்பு, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு — அனைத்தும் கலந்து அந்த இடத்தை ஒரு பண்பாட்டுக் கொண்டாட்டமாக மாற்றியது.

விழாவின் தொடக்கமே ஒரு அமைதி யான ஆனால் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. வயலின் இசையில் ஒலித்த தமிழ்த்தாய் வாழ்த்து, அரங்கம் முழுவதை யும் ஒரே உணர்வாக இணைத்தது. தொடர்ந்து நடைபெற்ற பிரார்த்தனைப் பாடல்,விழாவிற்கு ஆன்மீக அமைதியையும் ஒருமைப்பாட்டையும் வழங்கியது. வரவேற்பு உரை நிகழ்ச்சியுடன் மேடை உயிர்த்தது. அதைத் தொடர்ந்து மாணவர் களின் பேச்சு, அவர்களின் சிந்தனைத் திறனை வெளிப்படுத்தியது. சிறு வயதிலேயே அவர்கள் வெளிப்படுத்திய தெளிவு மற்றும் தன்னம்பிக்கை அரங்கத்தில் பாராட்டைப் பெற்றது. தமிழில் இயல்பாகவும் உறுதியாகவும் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்திய விதம், மொழிப் பயிற்சியின் வளர்ச்சியையும் வழிகாட்டுதலின் தாக்கத்தையும் தெளிவாக உணர்த்தியது.



திருமதி புவனேஸ்வரி சதீஷ் குமார்

பரதநாட்டிய நிகழ்ச்சி, தமிழர் பாரம்பரியக் கலையின் நுட்பத்தையும் ஒழுங்கையும் வெளிப்படுத்தியது. ஒவ்வொரு அசைவும் பயிற்சியின் உழைப்பையும் கலையின் ஆழத்தையும் காட்டியது. முகபாவங்கள், கை அசைவுகள் மற்றும் உடல் மொழி ஆகியவை ஒருங்கிணைந்து, பாரம்பரிய நடனத்தின் அழகியலை அரங்கில் உயிர்ப்புடன் வெளிப்படுத்தின. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நாடகங்கள், சமூகக் கருத்துகள், மற்றும் தமிழ்ப்பற்று ஆகியவற்றை சுவாரஸ்யமாக வெளிப்படுத்தின. அதோடு, இன்றைய காலத்தின் தொழில்நுட்ப மாற்றங்கள், சமூகப் பழக்கங்கள் மற்றும் நடப்பு வாழ்க்கை போக்குகள் போன்ற சமகாலத் தலைப்புகளும் நகைச்சுவை கலந்து நுணுக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. எளிய உரையாடல்கள், சுறுசுறுப்பான நடிப்பு மற்றும் சரியான நகைச்சுவை,

நேரமிடல் ஆகியவற்றின் மூலம் மாணவர்கள், சிந்தனையையும் சிரிப்பையும் ஒரே நேரத்தில் ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சியை உயிர்ப்புடன் மாற்றினர்.

“குழலினிது யாழினிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்”

திருவள்ளுவர் கூறிய இந்த வரிகளைப் போலவே, இளம் மாணவர்களின் குரல்களில் ஒலித்த பாடல்கள் அரங்கில் இருந்த அனைவரின் மனதையும் கவர்ந்தன. இசை என்பது வயதைக் கடந்து இதயங்களை இணைக்கும் ஒரு மொழி என்பதை அந்த நிகழ்ச்சிகள் மீண்டும் உணர்த்தின.

தமிழிசை, பக்திப் பாடல்கள் மற்றும் பாரதியார் பாடல்கள் என பல்வேறு இசை வடிவங்கள் மேடையில் ஒலித்தன. ஒவ்வொரு பாடலும் தனித்துவமான உணர்வை வெளிப்படுத்தியதோடு, தமிழின் இனிமையையும் அதன் இலக்கிய வளத்தையும் நினைவூட்டின.

வயலின் இசையின் மென்மை, பியானோ இசையின் நேர்த்தி மற்றும் குழு இசையின் ஒற்றுமை ஆகியவை அரங்கிற்கு ஒரு தனித்துவமான இசை அனுபவத்தை வழங்கின. இசைக்கருவிகளின் ஒலிகளும் மாணவர்களின் அர்ப்பணிப்பும் ஒன்றிணைந்து, பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சியின் பலனை வெளிப்படுத்தின.

விழாவின் பல வண்ணங்களை மேடையில் உயிர்ப்பித்தது நடன நிகழ்ச்சிகளே என்று கூறலாம். இசை ஒலித்த நொடியில் மேடை முழுவதும் உற்சாகம் பரவியது. குழு நடனங்கள் மாணவர்களின் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு மற்றும் குழு உணர்வை வெளிப்படுத்தின. நிறமயமான ஆடைகள், துல்லியமான அசைவுகள், இசையுடன் ஒன்றிணைந்த வெளிப்பாடு ஆகியவை ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பார்வையாளர்களின் நினைவில் நிற்கும் தருணங்களாக மாற்றின.

தனிநபர் நடனங்கள் அதே மேடைக்கு வேறொரு பரிமாணத்தை வழங்கின. ஒவ்வொரு மாணவரும் தங்களின் தனித்திறமை, தன்னம்பிக்கை மற்றும் கலை உணர்வை மேடையில் வெளிப்படுத்தினர். சிலர் பாரம்பரியத்தின் அழகை எடுத்துரைத்தனர்; சிலர் உற்சாகமும் ஆற்றலும் நிறைந்த நிகழ்வுகளால் அரங்கத்தைக் கவர்ந்தனர்.

விழாவின் சிறப்பை மேலும் உயர்த்தும் வகையில், தமிழ்ச் சமூகப் பணிகளிலும் தமிழ்மொழி வளர்ச்சியிலும் தொடர்ந்து பங்களித்து வரும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். தங்களது உரைகளில், தமிழ் மொழி என்பது வெறும் பாடமாக கற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று அல்ல; அது அடுத்ததலைமுறையின் வாழ்விலும் அடையாளத்திலும் நிலைத்திருக்க வேண்டிய ஒரு பண்பாட்டு பொக்கிஷம் என்பதை வலியுறுத்தினர். வெளிநாட்டில் வளர்ந்து வரும் குழந்தைகளுக்குத் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் அறிமுகப்படுத்தும் பணியில் பாரதியார் தமிழ்ப்பள்ளி ஆற்றி வரும் பங்களிப்பை அவர்கள் பாராட்டினர். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு, விழாவின் மிகவும் உணர்வுபூர்வமான தருணங்களில் ஒன்றாக அமைந்தது. ஆண்டு முழுவதும் மாணவர்களின் வளர்ச்சிக்காகத் தன்னலமின்றி உழைத்த ஆசிரியர்களுக்கு பாராட்டு மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

காலை முழுவதும் கலை, கல்வி மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளால் உற்சாகமாக இருந்த அரங்கம், மதிய நேரத்தில் தலைவாழை இலை விருந்தின் மூலம் தமிழர் விருந்தோம்பல் மரபின் இனிமையை உணர்ந்தது.

ஆண்டு விழாவின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு இடையே இடம்பெற்ற விளையாட்டுகள், மாணவர்களும் பெற்றோர்களும் ஒன்றாக மகிழ்ந்த தருணங்களை உருவாக்கின. போட்டியை விட பங்கேற்புக்கும் மகிழ்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்த இந்த நிகழ்வுகள், அரங்கம் முழுவதும் உற்சாகத்தையும் கலகலப்பையும் பரப்பின.

விழாவின் முக்கிய தருணங்களில் ஒன்று மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி. ஒவ்வொரு சான்றிதழும் ஒரு ஆண்டின் உழைப்பு, முயற்சி மற்றும் முன்னேற்றத்தை பிரதிபலித்தது. மாணவர்களின் முகங்களில் தெரிந்த பெருமை, அவர்களின் உழைப்பின் மதிப்பை வெளிப்படுத்தியது. இறுதியில் முழங்கிய பறை இசை, அரங்கம் முழுவதையும் அதிரவைத்தது. அந்த ஒலி வெறும் இசையாக இல்லாமல், தலைமுறைகளாகத் தொடரும் தமிழர் பண்பாட்டின் உயிரோட்டமாக எழுந்தது. ஒவ்வொரு தாளமும் ஒரு நினைவாக, ஒரு அடையாளமாக, ஒரு பெருமையாக அரங்கில் ஒலித்தது.

இந்த நாள் முடிந்திருந்தாலும், அதன் தாக்கம் நீண்ட காலம் மனங்களில் தொடரும் — ஒரு நினைவாக அல்ல, ஒரு உணர்வாக.

**வாழ்க தமிழ்!**
**வளர்க தமிழ்ப்பணி!**
**வளர்க வேர்களை மறக்காத தலைமுறைகள்!**


UNIEX
COURIER
BUY &
SHIP 4 U
16 YEAR'S OF EXCELLENCE
Proud Courier Partner Of World Tamil Conference , USA
முத்தமிழ் விழா
வாழ்த்துகள்
Offer
Discount
Code
SATS
TAMILNADU TO USA COURIER
10kg
Rs 875 per kg
13kg
Rs 800 per kg
30kg
Rs 750 per kg
+91 93808 39266
www.uniexcourierandcargo.com
COURIER
CARGO
PACKERS
& MOVERS
BAGGAGES
•Best Price •Pickup Facility •Live Tracking
Packing Facility •Reliable Service •Customer Service
* DELIVERY 4 TO 7 DAYS

Complimentary Printing Services By

**Minuteman Press.** Sterling VA

WE DESIGN, PRINT & PROMOTE...YOU!

(571) 375-7010
va224.minuteman.com
va224@minutemanpress.com
202 Lane Court, Ste B Sterling, VA 20166

*ELEVATE YOUR BRAND WITH OUR PRINTING SOLUTIONS*

தமிழ் பெண்கள் நடத்தும் நிறுவனம்

## DESIGN • PRINTING
## MAILINGS • APPAREL • SIGNAGE

### Our Products & Services

- •Advertising Strategies
- •Binders & Tabs
- •Brand Identity & Door Hangers
- •Brochures & Letterheads
- •Business Cards
- •Calendars & Planners
- •Catalogs & Rack Cards
- •Creative Design
- •Custom Bags & Boxes
- •Custom Branded Apparel
- •Custom Checks & Tickets
- •Direct Mail/EDDM
- •Envelopes & Stationery
- •Finishing Solutions
- •Flyers & Pens
- •Forms & Carbonless
- •Posters
- •Variable Data
- •Labels & Stickers
- •Large Format, Banners
- •Menus & Table Tents
- •Plaques & Awards
- •Postcards & Signage
- •Presentation Folders
- •Promotional Products
- •Greeting Cards & Invitations
- •Mailing & Marketing Services
- •On-Demand Digital Printing

